Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16
விலை ரூ. 50

புதன் பொய்கை

சுடர் : 38
கதிர் : 214

புதன்கிழமை 28 ஜூன் 2023



# உள்நாட்டுக் கடன் சீரமைப்பு போதுமக்களைப் பாதிக்காது

## ஜனாதிபதி நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு பொதுமக்களையோ, நாட்டின் வங்கிக் கட்டமைப்பையோ பாதிக்காது. அத்துடன் இந்த மறுசீரமைப்பு ஊழியர் சேமலாப நிதியம் உட்பட எந்தவொரு பொதுநிதியின் அங்கத்துவ மிகுதியிலோ அல்லது உயர் ஓய்வூதிய நிதிய விகிதத்திலோ பாதிப்பை ஏற்படுத்தாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். »15

## ஹெரோய்னுடன் நால்வர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 28
யாழ்ப்பாணம், குருநகர்ப் பகுதியில் மேற் »15

## ஐஸ் போதையை நுகர்ந்தவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 28
ஐஸ் போதைப்பொருளை நுகர்ந்த இளைஞர் ஒருவர் நெஞ்சுவலி »15

### உள்நாட்டுக் கடன்களில்

## கடுமையான சீரமைப்பை செய்யக்கூடாது அரசு!

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 28
உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் அரசாங்கம் தவணை நீடிப்பு உள்ளிட்ட சிறிய திருத்தங்களைச் செய்யலாம். மாறாகக் கடன் தள்ளுபடி »15

### நலன்புரித் திட்டத்தில் முறைகேடு

## ஆசிகுளத்தில் நேற்று மக்கள் போராட்டம்!

வவுனியா, ஜூன் 28
அரசாங்கத்தின் நலன்புரித் திட்டத் தெரிவில் முறைகேடு இடம்பெற்றுள்ளது என்று தெரிவித்தும், நீதியான முறையில் நலன்புரிக் கொடுப்பனவுப் பட்டியல் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும் வவுனியா ஆசிகுளத்தில் »15









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிக்கொடை உணர்வை விதைக்க விழிப்புணர்வு தேவை

## வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஜூன் 28

வடக்கு மாகாணத்தில் குருதிக்கொடை செய்வது தொடர்பில் விழிப்புணர்வை பல்வேறு மட்டங்களில் செயற்படுத்தி உயிர்காக்கும் மகத்தான சேவை உணர்வை அனைவர் மத்தியிலும் விதைக்கவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தாதிய பயிற்சிக் கல்லூரியில் குருதிக்கொடையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருதிக்கொடை வழங்குவதில் தற்போது நாம் வளர்ச்சி பெறாவிட்டாலும் முன்னேற்றகரமாக பலராலும் உணரப்பட்ட விடயமாகக் காணப்படுகிறது.

பலர் ஆக்கமும் ஊக்கமுமளித்து தாங்களாகவே முன்வந்து குருதிக்கொடை செய்துவருகிறார்கள். அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர். ஆயினும் வடபகுதியிலுள்ள மக்களிடம் இதுதொடர்பில் விழிப்புணர்வு குறைவாகவே காணப்படுகிறது. எனவே சமூகப் பொறுப்பை நாங்களாகவே உணர்ந்து செயற்படவேண்டும்.

மனிதஉயிர்களைக் காக்கும் மகத்தான சேவையான குருதிக்கொடை தொடர்பில் பல்வேறு மட்டங்களும் விழிப்புணர்வை மேற்கொள்ள வேண்டும். அனைத்துப் பகுதிகளிலும் எதிர்வரும் காலத்தில் குருதிக்கொடையாளர்களை உருவாக்க வேண்டும் - என்றார். (ச-26)



## அமைச்சுப்பதவி கேட்கமாட்டோம்

### கூறுகிறார் நாமல்

கொழும்பு, ஜூன் 28

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நாம் அமைச்சுப் பதவிகளைக் கேட்கவில்லை. அந்த அமைச்சுக்களை ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கி அரசைப் பலப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றோம் - இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன வின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமக்கு அமைச்சுக்கள் வேண்டாம் என்று நாம் எப்போதோ கூறிவிட்டோம். மொட்டுக் கட்சியினர் அமைச்சரவையில் இருப்பதால்தான் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து யாரும் வருவதில்லை என்று கூறுகின்றார்கள். எமது அமைச்சுப் பதவிகளை அவர்களுக்குக் கொடுத்து அரசைப் பலப்படுத்துங்கள் என்று நாம் அப்போதே சொல்லிவிட்டோம். நாங்கள் அதற்கு ஆதரவு வழங்குகின்றோம் என்றும் கூறிவிட்டோம்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 10 பேர் வருகின்றார்கள், 20 பேர் வருகின்றார்கள், 40 பேர் வருகின்றார்கள் என்று ஒரு வருடமாகச் சொல்கின்றார்கள். ஆனால், எதுவும் நடக்கவில்லை - என்றார். (ஒ-22)

## நாட்டில் கடன்மறுசீரமைப்பு: கோத்தாபய உல்லாசப்பயணம்



கொழும்பு, ஜூன் 28

நாட்டில் நாளை முதல் 5 நாள்களுக்குள் உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பு தொடர்பில் முக்கியமான முடிவுகள் எடுக்கப்படவுள்ள நிலையில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, கம்போடியா மற்றும் லாவோஸ் ஆகிய நாடுகளுக்குச் செல்லத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. உல்லாசப் பயணமாக அவர் இந்த நாடுகளுக்குச் செல்வதாகக் கூறப்படுகிறது. (ஒ-இ)

## தமிழர்களின் நிலங்களை சிங்களவர் அபகரித்ததாலேயே போர் செய்தோம்

### பிள்ளையான் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 28

தமிழ் மக்களுடைய காணிகளை சிங்களவர்கள் அபகரித்ததால் நான் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து போர் செய்தேன். இது நான் முதல் இருந்த நிலை. பின்னர் நான் அரசியலுக்கு வந்தேன் - இவ்வாறு தெரிவித்துள்ளார் பிள்ளையான் என்றழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன்.

மட்டக்களப்பு மாவட்டச் செயலர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மகாவலி மற்றும் மேச்சல்தரை தொடர்பான விசேட கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான் புலிகளில் இருந்து வந்தவன். எங்களுடைய காணிகளை சிங்களவர்கள் அபகரித்ததால் போர் செய்தோம். இது நான் முதல் இருந்த நிலை. அதை இப்போது கதைக்க முடியாது. பிரயோசனமில்லை, அதனால்தான் நான் அரசியலுக்கு வந்தேன்.

எங்கள் மக்களை ஒரு பக்கம் சமப்படுத்தவும், மறுபக்கம் அரசாங்கத்தை சமப்படுத்தவும் வேண்டும். அதற்காக இரு பக்கமும் ஒன்றிணைந்து விசேட மாத ஜனாதிபதியுடன் பேசி நாட்டின் சட்டங்களை மாற்றவேண்டும் - என்றார். (எ-இ)

## உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு விசேட அமைச்சரவைக் கூட்டம்

கொழும்பு, ஜூன் 28

விசேட அமைச்சரவைக் கூட்டத்துக்கு இன்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டு முக்கியமான முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-இ)

## கரும்புச் செய்கை பல ஆயிரம் ஏக்கர் நிலம் வவுனியாவில் வழங்கப்படும்

### அமைச்சரவை அனுமதி

சீனாவின் முதலீட்டாளர்களால் வவுனியாவில் மேற்கொள்ளப்படவுள்ள சீனி உற்பத்திக்கு முதற்கட்டமாக 30 ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்க அமைச்சரவை அனுமதியுள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தேசிய முதலீட்டுச்சபையி னூடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரடியாக சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கே அமைச்சரவை அனுமதித்துள்ளது.

சீனாவின் முதலீட்டில் வவுனியா வடக்கு பிரதேசசெயலர் பிரிவின் நயினாமடுவில் 492 ஏக்கரில் சீனி உற்பத்தித் தொழிற்சாலையை அமைக்கவும் சீனி உற்பத்திக்குத் தேவையான கரும்புச் செய்கையை மேற்கொள்வதற்குமென முதற்கட்டமாக 30 ஆயிரம் ஏக்கர் நிலம் தெரிவுசெய்யப்படவுள்ளது.

அதேநேரம் கரும்புச் செய்கைக்கு வவுனியா மாவட்டத்தின் சகல பிரதேசங்களில் இருந்தும் நிலம் பெறப்படுவதோடு அயல் மாவட்டங்களிலும் 'உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு' எனும் பெயரில் மேலும் 42 ஆயிரம் ஏக்கர் நிலமும் பெறப்படும்.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலும் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலுமே அதிக நிலம் உள்ளீர்க்கப்படும். அயல் மாவட்டமான முல்லைத்தீவிலும் குறிப்பிட்டளவு நிலம் உள்வாங்கப்படும் என அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## சமூகப் பணிகளைச் செய்து சமூகத்தை சுபீட்சப்படுத்துக

### அரச அலுவலர்களுக்கு மாவட்டச் செயலர் அறிவுரை



யாழ்ப்பாணம், ஜூன் 28

அரச அலுவலர்கள் சமூகச் செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். இந்தச் சமூகத்துக்கு உறுதுணையளிக்கும் மனப்பாங்கோடு செயலாற்ற வேண்டும் என யாழ்.மாவட்டச் செயலர் ஆ.சிவபாலசுந்தரம் தெரிவித்தார்.

யாழ்.தாதியர் பயிற்சிக்கல்லூரியில் இடம்பெற்ற குருதிக்கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்;

நிலையான அபிவிருத்தியை அடைய பொறுப்புணர்வுமிக்க ஒற்றுமையான சமுதாயத்தை எதிர்காலத்தில் கட்டியெழுப்ப வேண்டும்.

அரச சேவையில் இணைகின்ற அரச அலுவலர்களுக்கு இந்த சமூகத்துக்கு எதையாவது செய்யவேண்டும் என்ற மனப்பாங்கு இருக்கவேண்டும்.

நாம் சந்திக்கும் பொதுவான பிரச்சினைகளைப் போக்கவும், போதைப்பொருள் பயன்பாடு, மனநலப் பிரச்சினைகள், சிறுவர் மற்றும் முதியோர் வாழ்வு போன்றவற்றுக்குப் பெரும் பங்காற்ற வேண்டும். உதாரணமாக குருதிக்கொடை முகாம்களை ஒழுங்கமைத்தல் உள்ளிட்ட பல்வேறு சமூக சேவையில் ஈடுபடவேண்டும்.

எமது சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்துவதால் பிறரின் வாழ்வில் நம்மால் ஆரோக்கியமாக மாறுதலை உருவாக்க முடியும். அதற்கு எம்மை அர்ப்பணிக்க வேண்டும் - என்றார். (ச-26)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முறைகேடெனின் முறையிடுக மீள்பரிசீலனைக்குத் தயார்!

## யாழ். மாவட்டச் செயலர் அறிவிப்பு




**யாழ்ப்பாணம், ஜூன் 28**

**நலன்புரித் தெரிவுகளில் முறைகேடு இடம்பெற்றிருப்பின் தங்களுடைய மேன்முறையீடுகளை ஜூலை மாதம் 10ஆம் திகதிவரை அனுப்பிவைக்கலாம். மேன்முறையீடு பரிசீலனை செய்யப்பட்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்டச் செயலர் ஆ.சிவபாலசுந்தரம் அறிவித்துள்ளார்.**

நலன்புரிக் கொடுப்பனவுத் தெரிவுகளில் முறைகேடு தொடர்பில் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் தொடர்பில் வினவியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அரசாங்கத்தின் நலன்புரித் திட்டங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டோரின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
அதில் முறைகேடு இடம்பெற்றிருந்தால் எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதிவரை மேன்முறையீடுகளைச் செய்யலாம்.
தங்களுடைய மேன்முறையீடுகளை மாவட்ட சமுர்த்தி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்க முடியும். அந்த மேன்முறையீடுகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். மக்கள் இதுதொடர்பில் குழப்பமடையத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ச-26)

### ரணிலின் வீட்டுக்குத் தீவைப்பு

# ஒளிபரப்பிய பியத் கைது



சமூக ஆர்வலர் பியத் நிகேஷலா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்துக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தீ வைத்ததை நேரலையில் ஒளிபரப்பிய குற்றத்தில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
வாக்குமூலப் பதிவுக்காக கடந்த திங்கட்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார். வாக்குமூலப் பதிவின் இறுதியில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி3)

# மோட்டார் சைக்கிள் யாழ்.நகரில் திருட்டு

## சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 28
யாழ்ப்பாணம் சிவன் கோயிலில் நிறுத்திவைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளைத் திருடிய குற்றச்சாட்டில் நபரொருவர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
ஆலயத்துக்கு வழிபடுவதற்காக வருகைதந்த ஒருவர் மோட்டார் சைக்கிளை ஆலயத்தின் அருகே நிறுத்திவிட்டுச் சென்று பின்னர் வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிளை காணவில்லை. இதுதொடர்பில் உரிமையாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பண்டத்தரிப்பைச் சேர்ந்த 42 வயதுடைய சந்தேகநபரை கைதுசெய்ததுடன் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் மீட்டனர்.
மேலதிக விசாரணையில், கடந்த மாதம் யாழ்.நகரில் திருடப்பட்டு கொடிகாமம் பகுதியில் மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள் திருட்டுடன் சந்தேகநபர் தொடர்புபட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-26)

# கட்சித் தலைவர்கள் கூட்டம் வெள்ளி வரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 28
நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் நேற்று நடைபெறவிருந்த நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக் கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குச் சபாநாயகரின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பான பிரேரணைகளுக்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறும் நோக்கில் எதிர்வரும் சனிக்கிழமை நாடாளுமன்றசபை நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் இதன்போது தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-22)

# கட்டண அறவீடு உயர்வு; தீர்வு பெற்றுத் தாருங்கள்

## வடக்கு ஆளுநரிடம் கோரிக்கை


யாழ்ப்பாணம், ஜூன் 28
புதிய மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையிலான அதிகரித்த கட்டண அறவீட்டால் இடர்பாடுகளை கிளிநொச்சி சேவைச் சந்தை வர்த்தகர்கள் எதிர்கொண்டுவருகின்றனர். அதனைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுங்கள் என வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.
வர்த்தகர்கள் மற்றும் சேவை சந்தை வர்த்தகர் அபிவிருத்திச் சங்கத்தினரின் முறைப்பாட்டுக்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வடக்குமாகாண ஆளுநரை நேரடியாகச் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.
ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.
இந்தவிடயம் தொடர்பில் ஆராய்ந்து உரிய திணைக்களங்களோடு கலந்துரையாடி வர்த்தகர்கள் பாதிக்காத வகையில் தீர்வு பெற்றுத் தரப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் இதன் போது உறுதியளித்தார். (ச-125)




**"படிப்புக்கும் பண்பாட்டுக்கும் பேர்போன இடம் எது?" எண்டு கேட்டால் பட்டெண்டு 'யாழ்ப்பாணம்' எண்டு சொல்லக்கூடிய நிலைமை முந்தியொரு காலத்தில இருந்தது. இப்ப அதெல்லாம் கெட்டு, குட்டிச் சுவராப் போட்டுது. ஆனால் வெளிமாவட்டங்களில இருக்கிற சனங்கள் இன்னமும் பழைய யாழ்ப்பாணக் கனவில இருந்து வெளியில வரேலை. தங்கட பிள்ளையளை யாழ்ப்பாணத்தில கொண்டுபோய்விட்டால், அதுகள் படிச்சு முன்னேறும் எண்டு நம்புகினம். அதால யாழ்ப்பாணத்தில உள்ள சொந்தக்காரர், தெரிஞ்ச ஆக்கள் வீடுகளில தங்கட பிள்ளையளை தங்க வைச்சுப் படிப்பிக்கினம். அப்பிடி ஆரும் இல்லாத ஆக்கள் வாடகைக்கு ரூம் எடுத்தும் பிள்ளையளைத் தங்க வைக்கிற வழக்கமும் இருக்குது.**

**அப்பிடி கிளிநொச்சியில ஓ.எல். எக்ஸாமில குறைவா ரிசல்ட் எடுத்த பிள்ளை ஒண்டை அவையின்ர பெற்றோர், யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலுக்கு கிட்ட ஒரு வயசான அம்மா வீட்டில படிக்க விட்டவை. அந்த வீட்டில இன்னும் நாலு பிள்ளையள் இதை மாதிரி ரூம் எடுத்து தங்கி நிண்டு படிக்கினம். இந்தப் பிள்ளையும் ஒவ்வொருநாளும் ரியூசனுக்கு 'டே கிளாஸுக்கு' போறதும், படிக்கிறதுமா இருந்திச்சு. பிறகு கொஞ்சநாளால 'அம்மாக்குச் சுகமில்லை. வீட்டை போகப்போறன். வரநாள் ஆகும்' எண்டிட்டு அந்தவீட்டில இருந்து வெளிக்கிட்டுப் போட்டுது. அந்த வீட்டுக்கார அம்மாவும் பிள்ளை வீட்டை போட்டுது எண்டிட்டு பேசாமல் இருந்திட்டா. ஆனால் பிள்ளை வீட்டை போகேலை. ஒரு பெடியனோட கைதடியில தனி வீடொண்டில நிண்டுகொண்டு, வீட்டுக்காரருக்கு தான் யாழ்ப்பாணத்து 'அன்ரி' வீட்ட நிண்டு கிளாஸுக்கு போய்வாற மாதிரியே கதைவிட்டிருக்கு. அதுகளும் நம்பிக்கொண்டு இருந்திருக்குதுகள்.**

**முன்னப்பின்ன தெரியாத ஒரு பெடியனும் பெட்டையும் தனி வீட் டில தங்கட ஊரில இருந்தால் அந்த அயலட்டையளுக்கு டவுட் வரும் தானே. அவை பொலிஸுக்கு போன் பண்ணி, இதைப்பற்றி சொல்லியிருக்கினம். பொலிஸ்காரரும் அந்த வீட்டை போய் செக் பண்ண, அந்தப் பொம்பிளைப் பிள்ளை மட்டும் நிண்டிருக்கு. பெடியன் எஸ்கேப். அவனுக்கு பொலிஸ் போன் பண்ண 'மன்னார்ல நிக்கிறன். வாறன்' எண்டு சொல்லிக் கொண்டிருந்திருக் கிறானே தவிர ஆள் வரவேயில்லை. அந்தப் பிள்ளை பதினாறு வயசுக்குள்ள இருந்தால், ஏதும் நடவடிக்கையை பொலிஸ் எடுத்திருக்கலாம். ஆனால் பிள்ளைக்கு பதினேழு வயசு. ஒரு நடவடிக்கையும் எடுக்க ஏலாது. அதால பிள்ளையின்ர தாய், தகப்பனுக்கு போன்பண்ணி, அவையை வரச்சொல்லி, பிள்ளையை இப்ப அவையிட்ட பொலிஸ் ஒப்படைச்சிருக்காம். இப்பிடி யாழ்ப்பாணத்தில பிள்ளையளைப் படிக்க விடுற வெளிமாவட்டப் பெற்றோர் கொஞ்சம் அவதானமா, கண்காணிப்போட இருக்கிறது நல்லது. இல்லாட்டி இப்பிடியான நிலைமை அதுகளுக்கும் வந்திடலாம். எங்கட பிள்ளையளை நாங்கள் தான் பாதுகாக்க வேணும்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி, சண்டிலிப்பாயில் கண்புரை தெரிவு இறுதிமுகாம்

யாழ்ப்பாணம், ஜுன் 28

கரவெட்டி, சண்டிலிப்பாய் பகுதிகளில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்களைத் தெரிவு செய்யும் இறுதி கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிதொடக்கம் இடம் பெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நோயாளர்களுக்கு உடுப்பிட்டி கலாசார மண்டபத்திலும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட நோயாளர்களுக்கு சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலும் இந்தக் கண்பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது.

இந்தப் பகுதியில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் இந்த இறுதிச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தெரிவுசெய்யப்படும் கண்புரை நோயாளிகளுக்கு யாழ். போதனா மருத்துவமனையில் இலவசமாக கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-ரி2)

# சிவத்தமிழ்ச்செல்வி குருபூசை நிகழ்வு

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 15 ஆம்ஆண்டுகுருபூசைநிகழ்வுஎதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு துர்க்காதேவி தேவஸ்தானத்தில் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் பங்கேற்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகர் கலாநிதி எஸ்.கேதீஸ்வரன் சிறப்புரையாற்றவுள்ளார். தொடர்ந்து மூத்த சிவாச்சாரியார்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மாவையாதீனம் ஆதிகர்த்தா து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள், நயினை நாகபூஷணி அம்மன் ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசுவாமி, ஈவினை கற்பகப் பிள்ளையார் ஆலயப் பிரதம குரு தி.கெங்காதரக் குருக்கள், இணுவில் சுந்தரஆஞ்சநேயர் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் ஆகியோர் விருது பெறவுள்ளனர் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-இ)

# மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 01 . 1934



இறப்பு 27 . 06 . 2023

## திருமதி நடராஜா தங்கமணி (மணியம்மா)

கற்குளம் கொட்டடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா தங்கமணி நேற்று (27.06.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், வனஜாதேவி, கமலேந்திரன் (உருலோஸ்), காலஞ்சென்ற தேவராஜா மற்றும் விஜயன், லதாநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் (பிள்ளையார்) மற்றும் சாந்தினிதேவி (சாந்தி), மகேசன் (சேகர்), சந்திரமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2023) புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15, கற்குளம் லேன்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்காட்சி

யாழ்ப்பாணம் ஜுன் 28

கோண்டாவில் இந்துக் கல்லூரியின் கல்விக் கண்காட்சி இன்று 28ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் நடேசு தயாளன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் விருந்தினராக யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.சுரேந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (ய)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜுன் 28

யாழ்ப்பாணம் அரியாலை பிரப்பங்குளம் அருள்மிகு ஸ்ரீ மஹாமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. அதேவேளை எதிர்வரும் சனிக்கிழமை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெறும் என ஆலயப் பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ச-ரி3)

# சொற்பொழிவு

நீர்வேலி, ஜுன் 28

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

சொற்பொழிவை இளம் சைவப்புலவர் க. கயிலைவாசன் ஆற்றவுள்ளார். தொடர்ந்து மாணவர்களிடமிருந்து கேள்விகள் தொடுக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ச-ரி3)

◊◊◊◊

யாழ்ப்பாணம், ஜுன் 28

பெரியபுராணத்தின் சிறப்பை எடுத்துரைக்கும் முகமாக சிறப்புச் சொற்பொழிவு ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதி தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சொற்பொழிவை சைவப் புலவர் செ. கந்த.சத்தியதாசன் நிகழ்த்தவுள்ளார். (ச-ரி3)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். முயற்சி சாதகமாக முடியும்.

**இடபம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். விட்டுக்கொடுத்துச்செல்லவும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** சாதிக்கவேண்டும் என்ற துடிப்புடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளில் நன்றாக சிந்தித்து செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கணவன் - மனைவிக்கிடையே மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். முக்கியமான முடிவு எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

**விருச்சிகம்:** மனதில் தெளிவாகச் சிந்திக்கும் திறன் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பிரச்சினையை பேசி முடிவுக்குக் கொண்டுவர உகந்த நாள்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் சுபச் செலவாக இருப்பதால் மகிழ்ச்சியே உண்டாகும்.

**கும்பம்:** பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். விற்பனையும் லாபமும் இருக்கும்.

**மீனம்:** பொறுமையுடன் செயற் படவேண்டிய நாள் .தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

# இணைய வசதியின்றி 'கூகுள் மப்'

கூகுள் நிறுவனமானது பயனர்களின் தேவையைக் கருத்திற்கொண்டு புதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. அந்தவகையில், 'கூகுள் மப்' பயனர்கள் வரைபடத்தை சேமித்து வைத்து இணையவசதி இல்லாத சந்தர்ப்பங்களில் பயன்படுத்தும் வசதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. வரைபடத்தை மற்றொரு நபருக்குப் பகிரும்போது புறப்பட்ட நேரம், வந்தடையும் நேரம், தொலைபேசியின் பட்டரி சதவீதம் உட்பட அனைத்தும் பகிரப்படும். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேரர்களிடமிருந்து மாற்றம் தொடங்கட்டும்

'தொல்லியல் சார்ந்த விடயங்களில் தமிழ் மக்களுக்கு அச்சம் ஏற்படுவதற்கு பௌத்த தேரர்களே காரணம். பௌத்த தேரர்களின் தேவையற்ற தலையீடுகளாலேயே பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பௌத்த தேரர்களிடம் இதுபற்றிப் பல தடவைகள் கூறியும் அவர்கள் அதைச் செவிமடுக்கிறார்கள் இல்லை' என்று விசனித்திருக்கின்றார் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க.

தொல்லியல் சார்ந்த விடயங்கள் மட்டுமல்ல, நாட்டின் இனப்பிரச்சினை நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருப்பதற்கும் பௌத்த மேலாதிக்கச் சிந்தனையும், பௌத்த தேரர்களுமே காரணம் என்பதை மறுக்கமுடியாது, உள்நாட்டுப் போருக்கும் இதுவே காரணம். நாட்டின் அரசியலில் தேரர்கள் செலுத்தும் செல்வாக்கும், அவர்களின் தலையீடும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பெரும் தடைக்கற்களாக எப்போதும் இருந்திருக்கின்றன – இப்போதும் இருக்கின்றன. 'இலங்கை சிங்கள பௌத்தர்களின் நாடு, இந்தநாட்டில் சிறுபான்மையினருக்கு உரிமை இல்லை, அவர்கள் வந்தேறுகுடிகள்' என்ற பெரும்பாலான பிக்குகளின் சிந்தனையே இதற்குக் காரணம்.


தற்காலத்தில் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் முன்னெடுக்கப்படும் நில அபகரிப்புக்களின் பின்புலத்தில் பெரும்பாலும் பௌத்த தேரர்கள் சம்பந்தப்படுகின்றனர். தமிழர் பிரதேசங்களில் தொல்லியல் திணைக்கள ஆய்வுக்காக அடையாளப்படுத்தப்படும் இடங்களில் பௌத்த தேரர்கள் பிரசன்னமாவதும், அதன்பின்னர் அந்த இடங்களில் விகாரைகள் முளைப்பதும் தொடர்கதையாகியுள்ளது. நீதிமன்றக் கட்டளைகளையும் அலட்சியப்படுத்தி அவர்கள் தமிழர் பிரதேசத்தில் தம் மனப்போக்கில் செயற்படுகின்றனர். பௌத்த தேரர்களின் இவ்வாறான செயற்பாடுகளால் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகின்றன என்றுகூறும் துறை சார்ந்த அமைச்சர், தேரர்களைத் தடுத்து நிறுத்தத் திராணியற்றவராக இருக்கின்றார். நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் தேரர்களைக் கட்டிப்போடக்கூடிய மூக்கணாங் கயிறில்லாமல் கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றார்.

நாட்டில் சைவ மதகுருமாரோ அல்லது மௌலவியோ அல்லது பாதிரியாரோ இவ்வாறு செயற்படுவார்களேயானால் அவர்களை நோக்கிச் சட்டம் உடனடியாகப் பாயும் – நடவடிக்கை எடுக்கும் – சிறைக்குள் தள்ளும். ஆனால், நீதிமன்ற உத்தரவை மீறி தொல்லியல் அடையாளமிடப்பட்ட இடத்தில் அத்துமீறி விகாரை அமைக்கும் தேரர்களுக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்குவர். தேரர்கள் இனங்களுக்கிடையே தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குவர் – முரண்பாடுகளை ஏற்படுத்துவர். அதையெல்லாம் அதிகாரத்தில் உள்ளவர்களோ, சட்டமோ எள்ளளவும் கண்டுகொள்ளாதிருக்கும் காட்சிகளே இலங்கையில் நிகழ்கின்றன. நாட்டில் நிலவும் இந்தப் பாரபட்சமே இனங்களிடையே விரிசலை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும். பெரும்பான்மையினருக்கு ஒரு சட்டம் சிறுபான்மையினருக்கு ஒரு சட்டம் என்ற நிலைமையே சிறுபான்மையினர் தமக்கான தனி நாட்டைக் கோரிப் போராடும் நிலைமைக்கு இட்டுச் சென்றது என்பதையும் விளங்கிக்கொள்ளவேண்டும். இனியும் நாட்டில் இதே நிலைமை தொடருமானால் இனங்களிடையே நல்லிணக்கம் என்பது குதிரைக் கொம்பாகவே இருக்கும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழ் தரப்புக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலில் இந்தநிலைமையை மாற்றும் முயற்சிகளை பௌத்த தேரர்களிடம் இருந்தே ஆரம்பிக்கவேண்டும். நாட்டின் அனைத்து இன மக்களும் சமமாக நடத்தப்பட்டால் மட்டுமே அவர் எதிர்பார்க்கும் நல்லிணக்கத்தை உருவாக்கமுடியும். இன ரீதியான தண்டனை விலக்குரிமைக் கலாசாரம், சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர் தயக்கம் காட்டும் நிலைமை என்பன மாற்றப்பட வேண்டும். இன நல்லிணக்கம், ஒற்றுமை, முன்னேற்றம் என்று தமிழ் மக்களுக்கு பாடம் எடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலில் பௌத்தர்களிடமும், தேரர்களிடமும் இந்த மாற்றத்தைக் கொண்டு வருவாரா?

## நாளொரு நல்வார்த்தை

"உனக்குப் பெருமை வேண்டுமானாலும் உற்சாகம் வேண்டுமானாலும் பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக்கொள்!"
– பெரியார்






# மாகாணசபை அதிகாரங்களை அதிகரிப்பது தொடர்பில் பேச்சு

## ஜனாதிபதி ரணில் பிரான்ஸில் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 28**

**நடைமுறையில் உள்ள அரசமைப்பில் மாகாணசபைக்கு குறிப்பிட்ட அளவு அதிகாரப்பகிர்வு வழங்கப்பட்டுள்ளது. வடக்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் அரசியல் தலைவர்கள் மேலும் சில அதிகாரங்களைக் கோருகின்றனர். வடக்கு மாகாணசபைக்கு மட்டுமல்லாது நாட்டிலுள்ள அனைத்து மாகாணசபைகளுக்கும் மேலதிக அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக பேச்சு முன்னெடுக்கப்படுகின்றது - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பிரான்ஸுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்குள்ள ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்றனர். அந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

தமிழ் அரசியல் தலைவர்கள் அரசியல் தீர்வு குறித்தும், அதிகார பரவலாக்கம் குறித்தும் கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்துடன் பேச்சுகளை முன்னெடுத்து வரு கின்றனர். அந்தக் கோரிக்கைகளை சாதகமான முறையில் அணுகுவதற்கு எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (எ-இ)

# பாதுகாப்பு உடன்படிக்கை சீனாவுடன் இல்லவேயில்லை

கொழும்பு, ஜூன் 28

சீனாவுடன் இலங்கை எந்தவொரு பாதுகாப்பு உடன்படிக்கையையும் செய்து கொள்ளவில்லை. எதிர்காலத்திலும் எந்த ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையையும் இலங்கை செய்துகொள்ளாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சீனா அவ்வாறான உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் என தான் கருதவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

# நல்லிணக்க ஆணைக்குழுசட்டம் ஓகஸ்ட்டில் நிறைவேற்றம்

## அனைத்துத்தரப்பினரும் இணக்கமாம்


உண்மை மற்றும் நல்லிணக்கஆணைக்குழு தொடர்பான சட்டவரைவு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பிரான்ஸ் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேசவிசாரணை என்ற தமிழ்மக்களின் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்யுமா? என்ற கேள்விக்குப் பதில் அளித்துள்ள ஜனாதிபதி தென்னாபிரிக்கப் பாணியிலான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு அனைத்துத் தரப்பினரும் இணக்கம் வெளியிட்டுள்ளனர் என்று பதிலளித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவை சில வருடங்களுக்கு முன்னரே நாங்கள் உருவாக்கிவிட்டோம். நான் ஜனாதிபதியானதும் இது தொடர்பாகத் தென்னாபிரிக்காவுடன் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளேன். ஓகஸ்ட் மாதம் இது தொடர்பான சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவேன் - என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-இ)

| | | |
|---|---|---|
| நாளை | 29.06.2023 | சுபநேரம் : 07.26 - 08.56 |
| | வியாழக்கிழமை | ராகுகாலம் : 01.26 - 02.56 |
| | ஆனி 14 | ஹஜ்ஜுப் பெருநாள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்நாட்டுக் கடன் சீரமைப்பால் மக்களுக்குப் பாதிப்பு இல்லை

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 28**

**உள்நாட்டுக் கடன் மீள்கட்டமைப்பு நடவடிக்கையால் மக்களின் வங்கிக் கணக்குகளிலுள்ள வைப்புகளுக்கோ அவற்றின் வட்டி வீதங்களுக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.**

மக்களின் ஊழியர் சேமலாப நிதியத்துக்கோ, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கோ, ஓய்வூதியத்துக்கோ அதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. கடன் மீள்கட்டமைப்பு என்பது குறைப்புச் செய்யும் நடவடிக்கை அல்ல. இதன்மூலம் கடனை பிற்போடுவது கடனைக் குறைப்பது, கடன் செலுத்தும் கால எல்லையை நீடிப்பது போன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை - கடன் மீள்கட்டமைப்பு நடவடிக்கை மூலம் மக்களின் வங்கிக் கணக்குகளிலுள்ள வைப்புகளுக்கோ அவற்றின் வட்டி வீதங்களுக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவும் உறுதியளித்துள்ளார். (எ-இ)

## ஆறு மாதங்களில் ஜெயவர்த்தனபுரவுக்கு நகரவுள்ள கொழும்பு!

ஆறு மாதங்களில் கொழும்பை ஸ்ரீ ஜெயவர்த்தன புரவுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியின் வதிவிடம், பிரதமர் அலுவலகம் பிரதமரின் வாசஸ்தலம் ஆகியவற்றை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டைக்கு இடம் மாற்றும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் ஆறு மாதங்களில் பூர்த்தியடையும் என்று நகர அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் நிரேஷ் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதற்கான திட்டம் சிங்கப்பூர் நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள முக்கியமான அலுவலகங்கள் இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர் ஜனாதிபதி செயலகம் அமைந்துள்ள இடம் சுற்றுலா மையமாக பிரகடனப்படுத்தப்படவுள்ளது. இந்தப்பிரதேசம் கொழும்புக்கான நுழைவாயிலாக பிரகடனப்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்துக்காக 411 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் தலைநகரை ஜெயவர்த்தனபுரவுக்கு மாற்றும் திட்டம் ஜே.ஆரின் காலத்திலேயே முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு நகரின் சன நெருக்கடியைக் குறைக்கும் நோக்கத்துடனேயே ஜே.ஆரால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ-6)

## 20 நாள்களில் 61 ஆயிரம் சுற்றுலாவிகள்

கொழும்பு, ஜூன் 28

இந்த மாதத்தின் முதல் 20 நாள்களில் இலங்கைக்கு 61 ஆயிரத்து 183 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது,

ஜூன் மாதத்தில் 87 ஆயிரத்து 521 சர்வதேச சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டுள்ள நிலையில், இலங்கை தமது இலக்கில் 70 சத வீதத்தை அடைந்துள்ளது.

ஜூன் மாதத்தின் 21ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில், 26 ஆயிரத்து 338 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வர வேண்டும். கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 5 லட்சத்து 85 ஆயிரத்து 669 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். (எ-இ)

## மருத்துவத்துறையில் பெரும் நிதி நெருக்கடி



கொழும்பு, ஜூன் 28

மருத்துவத்துறையில் பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருத்துவமனைகளில் தங்கிச் சிகிச்சை பெறுவோர், கிளினிக் நோயாளர்கள் பராமரிப்பு மற்றும் மருந்துக் கொள்வனவு என்பவற்றுக்காக 68 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது என்றும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவிடமிருந்து கடன் அடிப்படையில் மருந்துகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக ஆராயப்படுகின்றது. மருந்துத் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் உள்நாட்டிலேயே மருந்துகளைத் தயாரிப்பது தொடர்பாகவும் பரிசீலிக்கப்படுகின்றது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். (எ-6)

## சுகாதார அமைச்சில் மாயமான வாகனங்கள்



கொழும்பு, ஜூன் 28

சுகாதார அமைச்சின் ஆயிரத்து 794 வாகனங்கள் காணாமற் போயுள்ளன என்றும், 259 வாகனங்கள் வெளித் தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்கள் 1950ஆம் ஆண்டு மற்றும் 1996ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பதிவு செய்யப்பட்டவை என பொதுக் கணக்குகள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

இந்த வாகனங்களில் 679 கார்கள் மற்றும் ஆயிரத்து 115 மோட்டார் சைக்கிள்கள் அடங்கும் என்றும் இந்த வாகனங்கள் தொடர்பான வருவாய் உரிமம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனங்கள் காணாமற்போவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோபா குழுத் தலைவர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

## வெற்றிடங்களை நிரப்ப பயிற்சி மருத்துவர்கள்!

### சுகாதார அமைச்சு தீர்மானம்

கொழும்பு, ஜூன் 28

மருத்துவத்துறையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உள்ளகப்பயிற்சி பெற்று வருகின்ற மருத்துவர்களை நியமிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

மருத்துவர்களின் ஓய்வு மற்றும் வெளிநாடுகளுக்குச் செல்லுதல் உள்ளிட்ட காரணங்களால் நாட்டில் விசேட மருத்துவ நிபுணர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

அதனால் விசேட மருத்துவ நிபுணர், பொது வருகை மருத்துவ நிபுணர் போன்ற பதவிகள் வெற்றிடங்களாகியுள்ளன.

அத்துடன் புதிய மாணவர்கள் மற்றும் உள்ளகப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு பயிற்சி வழங்க முடியாத நிலைமையும் பல மருத்துவமனைகளில் காணப்படுகிறது.


அதற்கமைய இவை யாவற்றையும் நிவர்த்திக்கும் முகமாக இரண்டு மருத்துவ நிபுணர்களின் கீழ் பயிற்சிபெறும், மருத்துவ மேற்படிப்பை மேற்கொள்ளும் புதுமுக மாணவர்களுக்கு விரிவுரைகளை நிகழ்த்தும் உள்ளகப் பயிற்சி மருத்துவர்களை நியமிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (ச-6)

## கடன் அட்டைக்கான வட்டிவீதம் குறையும்

எதிர்வரும் 1 ஆம் திகதி முதல் பல்வேறு வர்த்தக வங்கிகள் தங்களது கடன் அட்டைகளுக்கான வட்டிவீதங்களைக் குறைக்கத் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்திய வங்கியின் நாணயசபை, கடன் மற்றும் வைப்பு வட்டி வீதங்களை அண்மையில் குறைத்திருந்தது. இதனை அடுத்து வங்கிகள் தங்களது வட்டி வீதங்களைக் குறைக்கும் என்ற எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. கடன்களுக்கான வட்டிவீதங்கள் தொடர்பாக இதுவரையில் தகவல் எவையும் வெளியாகவில்லை. (ஒ-இ)

## கனடா விசா மோசடியில் ஈடுபட்ட பெண்கள் கைது



கொழும்பு, ஜூன் 28

கனடாவுக்கு விசா பெற்றுத் தருவதாகக் கூறி மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒரு ஆணும், ஐந்து பெண்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மோசடி விசாரணைப் பணியகத்துக்குக் கிடைத்த பல்வேறு முறைப்பாடுகளை அடுத்து மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கடவத்தைப் பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்கி வந்த போலி ஆவண நிலையம் ஒன்று சோதனையிடப்பட்டபோது, பொலிஸாரால் பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைக்குட்படுத்தப்படுகின்றனர் என்றும், அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சாவகச்சேரியில் இரு விபத்துகள்

சாவகச்சேரி, ஜுன் 28

ஏ-9 வீதியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை இருவேறு விபத்துகள் இடம்பெற்றுள்ளன.

வர்த்தகர் ஒருவர், மகளை கல்வி நிறுவனத்துக்கு ஏற்றிச் சென்ற வேளை மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்கு உள்ளானதில் காலில் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேவேளை பாடசாலை முடிந்து பாதசாரிகள் கடவையில் வீதியைக் கடந்த மாணவனை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மாணவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-ரி3-9)

# வெள்ளி, ஞாயிறு விடுமுறை

# ஜூலை முதல்

## நடைமுறைத் தீர்மானங்கள் மாவட்டச் செயலரால் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜுன் 28**

**யாழ்.மாவட்டத்தில் பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக வாரத்தில் 7 நாள்களும் தனியார் கல்வி நிலையங்களால் நடத்தப்படும் கற்பித்தல் செயற்பாடுகளை வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நிறுத்தும் செயற்பாடு எதிர்வரும் ஜுலை முதலாம் திகதி நடைமுறைப்படுத்தப்படும் என யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.**

இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் யாழ்.மாவட்டச் செயலரால் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:-

அதற்கமைய இந்தச் செயற்பாடு தொடர்பில் பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பிரதேசசெயலக சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்கள், மதஸ்தலங்கள், தொண்டுநிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், பிரதேச செயலர் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு ஏற்படும் மன அழுத்தங்களைக் குறைப்பதற்கும் பெற்றோர் பிள்ளைகளுக்கான பிணைப்பை ஏற்படுத்துவதற்கும் பிள்ளைகள் பெற்றோருடன் அதிக நேரத்தை செலவிடவும் பிரத்தியேகக் குழு வகுப்புகள், சூம் தொழில் நுட்ப வகுப்புகள் என்பனவற்றை வெள்ளி, ஞாயிறு தினங்களில் நடத்துவதை நிறுத்தவேண்டும்.

கல்விச் செயற்பாட்டில் ஈடுபடும் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் பிரத்தியேக குழு வகுப்புகளை நடத்துபவர்கள் தங்களுடைய நிறுவனம் சார்ந்த பதிவை உள்ளூராட்சிசபைகளில் மேற்கொண்டு பிரதேச செயலகங்களுக்கு விவரங்களை சமர்ப்பிக்கவேண்டும்.

தற்போது கல்விச்செயற்பாட்டில் ஈடுபடும் சகல தனியார் கல்வி நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து மாவட்ட மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஓர் அமைப்பாக உருவாக்க வேண்டும். எதிர்காலத்தில் தமது கருத்துகளையும் கண்காணிப்புகளையும் இந்த அமைப்பின் பிரதிநிதிகளினூடாக மேற்கொள்ளல்வேண்டும். மேற்குறிப்பிட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் சுகாதாரத்துறை, காவல்துறை, கல்விசார் துறையினர், மதத்தலைவர்கள், சமூகஆர்வலர்கள், சிறுவர் நன் நடத்தை உத்தியோகத்தர்கள் உள்ளடக்கி குழுக்களை அமைக்க வேண்டும். இந்தக் குழுவின் ஊடாக மாதாந்தம் கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்து மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறுவதை உறுதிப்படுத்தி சமூக மாற்றத்தை உருவாக்கவேண்டும் - என்றுள்ளது. (ச-20)

## அம்பாந்தோட்டை செல்லும் காலிமுகத்திடல் யாசகர்கள்

கொழும்பு, ஜுன் 28

கொழும்பு காலிமுகத்திடலில் தங்கியுள்ள யாசகர்களை அம்பாந்தோட்டை ரிதியகமவில் அமைந்துள்ள சமூக சேவைகள் புனர்வாழ்வு நிலையத்தில் தங்கவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

காலிமுகத்திடலில் யாசகர்களால் ஏற்படும் அசௌகரியங்களைத் தடுக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதற்காக துறைமுக அதிகாரசபை மற்றும் பொலிஸார் இணைந்து வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளனர் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

காலிமுகத்திடலில் யாசகம் பெறும் சுமார் 150 பேர் கொண்ட யாசகர்கள் குழுவால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என்று துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த யாசகர்கள் ரிதியகம மையத்தில் தங்கியிருக்கும்போது அவர்களுக்குத் தேவையான தங்குமிட வசதிகள், உணவு மற்றும் பானங்களை வழங்குவதற்கான நிதியுதவியை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் ஊடாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று துறைசார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பணிப்புரை விடுத்துள்ளார். (எ-இ)

## மரபுரிமை ஆவணம் 'மகாவம்சம்'

### யுனெஸ்கோ அறிவிப்பு

கொழும்பு, ஜுன் 28

'மகாவம்சம்' நூலை உலக நினைவக மரபுரிமை ஆவணமாக யுனெஸ்கோ அமைப்பு அறிவித்துள்ளது.

இந்த நூல் கி.பி. 6 ஆம் நூற்றாண்டளவில், பாளி மொழியில் மகாநாம தேரர் எனும் பௌத்த பிக்குவால் தொகுக்கப்பட்டது.

இந்த நூல் இலங்கை வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கி - பௌத்த மதத்தை முதன்மைப்படுத்தி தொகுக்கப்பட்ட பழமையான தொகுப்பு நூலாகும். அதன்படி யுனெஸ்கோவால் இந்த ஆண்டு புதிதாக அறிவிக்கப்பட்ட 64 உலக சர்வதேச ஆவண மரபுச் சின்னங்களில் 'மகாவம்சம்' இணைக்கப்பட்டுள்ளது. (ச-ரி2)



### மன்னாரில் இயக்கர், நாகர்கள்

## வரலாற்று ஆய்வுக் காணொலி வவு. பல்கலையிடம் கையளிப்பு

மன்னார் மாவட்டத்தில் நாகர்கள், இயக்கர்கள் வாழ்ந்த இடங்கள் தொடர்பில் உருவாக்கப்பட்ட ஆய்வு ஆவணக் காணொலி இறுவட்டு, தமிழர் வரலாற்றை அடுத்த தலைமுறையினருக்குக் கடத்தும் முகமாக வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு வவுனியா பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மன்னார் ஊடகவியலாளர் எஸ்.ஜெகனின் ஆய்வில் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் அனுசரணையில் இந்த ஆவணக்காணொலி உருவாக்கப்பட்டுள்ளது.

சங்ககால இலக்கிய நூல்களிலிருந்தும் மற்றும் மன்னார் மாதோட்டப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட களஆய்விலிருந்தும் பெறப்பட்ட தகவல்களிலிருந்து காணொலி ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயன் வருவதற்கு முன்னரே இங்கு வாழ்ந்த தமிழர்களின் மூத்த குடிகளாகவும் கோத்திர இனத்தவராகவும் வாழ்ந்த நாகர், இயக்கர், வேடுவர் போன்றோர் தமிழர்களே என்பது இதில் எடுத்துக்கூறப்படுகிறது. நாகர் இனத்தவர்கள், மாந்தைப் பகுதியில் நாகதாழ்வு, பெரியநாவற்குளம், சிறுநாவற்குளம், நாகபடுவான் போன்ற இடங்களிலும் இயக்கர் இனத்தவர்கள் மன்னார்கட்டுக்கரையை அண்டிய பகுதிகளில்பண்ணை வெட்டுவான், தம்பனைக்குளம், கோரமோட்டை, நெடுங்கண்டல், நெட்டாங்கண்டல், பரப்பாங்கண்டல் உட்படப் பல பகுதிகளிலும் வாழ்ந்தார்கள் என்பது ஆய்வுக் காணொலியில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இயக்கர்கள், நாகர்கள் என்பவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் இந்தியாவின் நாகபட்டினம் போன்ற இடங்களிலும் வாழ்ந்துள்ளார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. (ச-213)

## வடக்கின் கல்வி வளர்ச்சிக்கு கல்விச்சமூகமே பங்குதாரர்!

### யாழ். மேலதிக மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு

வடக்கின் கல்வி வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பங்காற்றி சிறந்த மாணவர்களை உருவாக்குவதற்கு கல்விச் சமூகத்தின் பங்கு மேலும் அதிகரிக்கவேண்டும். அதற்கு துறைசார்ந்த அதிகாரிகள் முன்வரவேண்டும் என யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆலோசகரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சரா. புவனேஸ்வரனின் மணிவிழா நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் உரையாற்றுகையில்; கல்வியை நாம் விலைக்கு வாங்க முடியாது. தற்போதைய சூழ்நிலையில் சமூகத்தின் வளர்ச்சி கல்வித்துறையிலேயே தங்கியுள்ளது. பாடசாலைகள் தான் எமது கல்விச் செழுமையின் மைய சக்தியாக விளங்குகின்றன. அரசிடம் எதிர்பார்த்தல் என்பதிலிருந்து விலகி சிந்திக்கவும் செயற்படவும் கல்விச் சமூகம் தயாராகுதல் வேண்டும்.

வடக்கின் வளர்ச்சி கல்வியூடாக வரும்போது அறிவுசார் பொருளாதார மையமாக எமது பிரதேசம் நிச்சயம் வளர்ச்சி பெறும். எனவே தெளிவான தொலைநோக்குக் கொண்டு வடக்கு மாகாண பாடசாலைகளினதும் பெறுபேறுகளிலும் வளர்ச்சியின் முகவர்களாக நாம் திகழ வேண்டும் - என்றார். (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 - 06 - 1949



மறைவு 27 - 06 - 2023

### திருமதி நாகேஸ்வரி சிவானந்தன்

அராலி செட்டியார் மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி சிவானந்தன் நேற்று (27.06.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் சிவராமலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற சிவானந்தன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா பூமணி தம்பதிகளின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2023) புதன் கிழமை காலை 7.00 மணிக்கு அவரது இல்லமான சிவஅகத்தில் (செட்டியார் மடம், அராலி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 9.00 மணியளவில் அராலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. குகராஜன்

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 06 . 1960



மறைவு 27 . 06 . 2023

### செல்வி இரதிதேவி கனகரத்தினம்

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இரதிதேவி கனகரத்தினம் நேற்று (27.06.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் (ஆசிரியர்) சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், வசந்தாதேவி, திருமாலினி, கிருபாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயரத்தினம் (சட்டத்தரணி), சிவயோகம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும், வைத்தியகலாநிதி டயானா (ஆஸ்திரேலியா), பிரசாத் (பொறியியலாளர்) ஆகியோரின் சித்தியும், நிசாகன் (பொறியியலாளர் - அவுஸ்ரேலியா), சாம்பவி (பொறியியலாளர் - கொழும்பு), சிவசக்தி (ஜேர்மனி), சிவசங்கர் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், தர்ஸ்வின், தருஷ்ணியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நவரத்தினராசா வீதி,
கோண்டாவில் மேற்கு.
077 465 2752

(cs 25367) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 12 . 1927



மறைவு 26 . 06 . 2023

### திருமதி சுவாம்பிள்ளை திரேசம்மா

இளவாலையைப் பிறப்பிடமாகவும், தற்போது பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுவாம்பிள்ளை திரேசம்மா நேற்றுமுன்தினம் (26.06.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - றோசமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுவாம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வயித்தியம்பிள்ளை - எலிசபேத் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான ஜோசேப், அன்னம்மா, மேரிப்பிள்ளை, மரியம்மா, சந்தியாப்பிள்ளை, செபஸ்ரியான்பிள்ளை மற்றும் லூர்துமேரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்ரன் (சந்திரா), மதுரநாயகி (மதுரம்), மேரிபற்றீசியா (பேபி), மரியகொன்செப்ரா மகிமைநாயகி (மகிமை - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யசிந்தா (பபா), தனேஸ்வரன், காலஞ்சென்ற பத்திநாதர், றெக்ஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துஷாரா, சஞ்சித், நிஷாந்தினி - ஜெயக்குமார், துகாசினி, காலஞ்சென்ற காசிபன், ஜெயகரன், கார்திகா, மதுகரன், றொபின்சன் தங்கா, பிறின்சன் தாரணி, வின்சன் நொயலின், யோன்சன் கீர்த்தனா, மெல்வின், றயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.06.2023) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் புனித யுவானியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


சித்தங்கேணி வீதி,
பண்டத்தரிப்பு.

(CS/51036)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

077 977 3271, 076 704 7457

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை சிவசோதி

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை சிவசோதி நேற்றுமுன்தினம் (26.06.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான முத்து நம்பு விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரன், ரவீந்திரன் மற்றும் பாலேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, ஞானசோதி, இரத்தினசோதி மற்றும் அருட்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நந்தினிதேவி, சியாமளா, அருள்நிதி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற துஷ்யந்தன் மற்றும் துஷ்யந்தினி, நிரோஜன், அனுஷா, பிரவின் (லண்டன்), கார்த்திகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.06.2023) வியாழக்கிழமை புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள அம்மா முதியோர் இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று காரைக்கால் இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.355, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS/51039)AH-1

தகவல்: தம்பி
வேலுப்பிள்ளை அருட்சோதி

077 153 8110

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒட்டுசுட்டான்

# ஒட்டுத் தொழிற்சாலைக்கு நிபுணர்கள் குழு பயணம்!

முல்லைத்தீவு, ஜூன் 28

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீள் உருவாக்கம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் முன்னாய்வுகளுக்காக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் உள்ளிட்ட நிபுணர்கள் குழுவொன்று தொழிற்சாலைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டது.

இது தொடர்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்ததாவது:-

எமது இளைஞர்கள், யுவதிகளது வேலை வாய்ப்புத் தொடர்பில் சிந்திக்க வேண்டிய சூழல் தற்போது உருவாகியுள்ளது. ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் இந்த ஓட்டுத் தொழிற்சாலை மீள இயங்குவதானது தமது வாழ்வாதாரத்தைப் பலப்படுத்தும் என்று நம்புகின்றார்கள். அது உண்மையும்கூட. எனவே, இதன் அடிப்படையில் என்னையும், இயந்திரவியல் பொறியியலாளர்கள் மூவரையும், குடிசார் பொறியியலாளர் ஒருவரையும், ஒட்டுசுட்டான் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியையும் உள்ளடக்கிய நிபுணர்கள் குழு இன்று இந்தத் தொழிற்சாலையில் கள ஆய்வை மேற்கொண்டுள்ளது. பெரும் செயற்றிட்டங்களை மேற்கொள்ளாமல் மிக இலகுவாக இந்தத் தொழிற்சாலையை இயங்க வைக்கக்கூடிய நிலைமையே இப்போதுள்ளது. இது தொடர்பில் அறிக்கையொன்றைத் தயாரித்து கைத்தொழில் அமைச்சருடன் விரைவில் கலந்துரையாடவுள்ளோம் - என்றார். (அ-ம-125)

## ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ்பில் கைவைக்கக்கூடாது

### ஜே.வி.பி. உயர்நீதிமன்றில் மனு

உள்ளூர் கடன் மறுசீரமைப்புக்காக ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி போன்றவற்றில் அரசாங்கம் கைவைக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்த வலியுறுத்தி மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

ஜே.வி.பி.யின் சார்பு தொழிற்சங்கங்களின் தலைவர் வசந்த சமரசிங்க இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். மத்திய வங்கி ஆளுநர், நிதியமைச்சின் செயலாளர் மற்றும் ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரிகள் உட்பட 46 பேர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உள்ளூர் கடன் மறுசீரமைப்புக்காக ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி போன்றவற்றுக்காக அரசாங்கம் பெற்றுக்கொண்ட கடனை இரத்துச்செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வாறு அரசாங்கம் பெற்றுக்கொண்ட கடனை இரத்துச்செய்வதற்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-6)

## போதகரை வழிமறித்து கத்திமுனையில் கொள்ளை

மன்னார், ஜூன் 28

மடு இரண்டாம் கட்டைப் பகுதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த போதகர் மற்றும் அவருடைய மனைவி ஆகியோரை வழிமறித்து கத்திமுனையில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

போதகரும் அவருடைய மனைவியும், ஆராதனைகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது, தம்பனை காட்டுப்பகுதியில் உள்ள வீதி வளைவில் வைத்து இரண்டு நபர்கள் முகத்தை துணியால் மறைத்தபடி அவர்களை வழிமறித்தே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மடு பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-56)

## ஆளும்கட்சி எம்.பி.க்களை இன்று சந்திக்கிறார் ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி செயலகத்தில் இன்று புதன்கிழமை மாலை இடம்பெறவுள்ளது. உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்புக்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்த பின்னர், இந்த விடயம் நாளுக்குநாள் பேசுபொருளாகி வரும் நிலையில், அது தொடர்பான தெளிவூட்டல்களை வழங்குவதற்காகவே இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (அ-ம-22)


**வேலையாள் தேவை**

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றுக்கு பெண் கணக்காளர் தேவை.

**077 777 1457**

(CS/51031)AH-1



**பெயர் மாற்றம்**

கோணாவளை வீதி, மாதகலில் வசிக்கும் **எட்வேட் துரைராசா சுதாஸ்சன்** ஆகிய நான் எனது பெயரை **எட்வேட் துரைராசா சுதர்சன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **எட்வேட் துரைராசா சுதர்சன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

**எட்வேட் துரைராசா சுதர்சன்**


## மரண அறிவித்தல்

மலர்வு 11 . 06 . 1931



உதிர்வு 25 . 06 . 2023

### திருமதி குணசிங்கம் சிந்தாமணி

(இளைப்பாறிய அதிபர்)

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் 85/17 ஏ.வி வீதி அரியாலை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணசிங்கம் சிந்தாமணி அவர்கள் கடந்த (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு குணசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்பலம், மீனாட்சிபிள்ளை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரு செங்கமலம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அபிராமிப்பிள்ளை அவர்களின் அன்புச் சகோதரியும், வையித்திலிங்கம் சங்கரப்பிள்ளை, காலஞ்சென்ற குமாரவேலு தங்கம்மா, காலஞ்சென்ற நடேசு ஆகியோரின் அன்பு மைத்துனியும், மங்கையர்க்கரசி (கனடா), இந்துமதி(கனடா), காலஞ்சென்ற லலிதாமதி, தேவராசன்(கனடா), இளங்குகராசன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் சண்முகசுந்தரம் ஹனிஸா, பானு ஆகியோரின் அன்பு மாமியாரும், தனராஜ், செந்தூர்றாஜ், தசலக்சன், பிரியதர்சன் விமலதர்சனா, பிரதீபா, சரண்யா, சசிறாஜ், ரமண்றாஜ், தனயன், தனுசன், தகயவன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், டிஷான், ஷகிரா, ஹர்சித், பிரிசன், ரோகித், ராணியா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (29.06.2023) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சித்து பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS/25362)

தகவல்:குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 01 . 1949



மறைவு 27 . 06 . 2023

### திரு.வின்சென்ற் வில்லியம் மரியதாஸ்

(பிரபல கணித ஆசிரியர்)

யாழ்ப்பாணம் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வின்சென்ற் வில்லியம் மரியதாஸ் (மாஸ்ரர்) நேற்று (27.06.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வின்சென்ற் - மோட்சலங்காரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற டாக்டர் ஜோர்ஜ் ஞானமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற எலிசபேத் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், திரு.ஆதர் (ரூபன் -பிரான்ஸ்), காலஞ்சென்ற கென்றி (தீபன்) மற்றும் எட்வேட் (ரீகன் - Merchant Bank, கிளிநொச்சி), பூங்குழலி (யா/உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி இராசமலர் அன்புராசா, திருமதி ஜெயமலர் அலோசியஸ் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திரு.அன்ரன் மரியதாஸ் (கனடா), அல்பிறட் மரியதாஸ் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாள்ஸ் ஞானேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற அன்று ஞானேஸ்வரன் மற்றும் திருமதி அக்னெஸ் ஞானேஸ்வரி டெனிஸ் (பிரான்ஸ்), திருமதி ஆன் ஞானேஸ்வரி அன்ரன் மத்தியூஸ், ஆஞ்சலோ ஞானேஸ்வரன் (கனடா), பிலிப் ஞானேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், கபிரியேலா (பிரான்ஸ்), கிருஷா (ஸ்ரீலங்கா ரெலிக்கொம் - கிளி நொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஒறியானாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (28.06.2023) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம்.


தகவல்: குடும்பத்தினர்.

(CS 25371) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதன் பெய்கை



"அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்." - வள்ளுவர்

# இணையவழி வர்த்தகம்: அனுகூலமும் ஆபத்தும்

பிரியா இராமநாதன்

சத்தமேயில்லாமல் ஒரு 'வணிக முறைமை' கடந்துசென்ற பெருந்தொற்றுச் சூழ்நிலையினை சாதகமாக்கிக்கொண்டு அசுர வளர்ச்சிகண்டுள்ளது. அதுதான் இணைய வர்த்தகம்!

பண்டிகைகள் என்றாலே எல்லோருக்கும் கொண்டாட்டம் தான். அதிலும் வணிகர்களுக்கு இரட்டிப்புக் கொண்டாட்டம் என்றால் அது மிகையில்லை. ஏனெனில், முன்னைப்போல அல்லாமல் மக்களின் நுகரும் தன்மை மற்றும் பொருள்களை வாங்கிக்குவிக்கும் ஆற்றலும் அதற்குரிய வாய்ப்புக்களும் அதிகப்பட்டிருந்தாலும், இன்னுமே 'பண்டிகைக்கால விற்பனை' எனும் ஒன்றிற்கான எதிர்பார்ப்பு மக்களிடம் குறையவேயில்லை என்றுகூட கூறலாம். ஆனால், இப்போதெல்லாம் பண்டிகைக்கால விற்பனைகள் இணையத்தை மையப்படுத்தியதாக மாற்றம்பெற்றுவிட்டன. எம்முடைய சிறுவயதிலெல்லாம் புத்தாடை வாங்கு வது என்றால் அது ஏதேனும் பண்டிகையின்போதோ அல்லது பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போதோ எனும் வரையறை இருந்தது. இப்போதெல்லாம் அப்படியல்ல. அவசியம் இருக்கிறதோ இல்லையோ கண்ணில்படுவதை வாங்கும் போக்கு எம்மிடம் உள்ளது.

கொரோனாத் தொற்றுக் கட்டுப்பாட்டுக் கெடுபிடிகளால் அனைத்து பண்டிகைக் கால விற்பனைகளுமே கடுமையாகப் பாதிக்கப்பட்டன. மிக நெருக்கடியான நிலைமையை விற்பனையாளர்களும், உற்பத்தியாளர்களும் எதிர்கொண்டனர். ஆனால், சத்தமேயில்லாமல் ஓர் 'வணிகமுறைமை' கடந்துசென்ற பெருந்தொற்றுச் சூழ்நிலையினை சாதகமாக்கிக்கொண்டு அசுர வளர்ச்சி கண்டுள்ளது. அதுதான் இணைய வர்த்தகம்!

கொரோனா காலகட்டத்தில் மக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியில் வரக்கூடாது என்று தெரிவித்த காரணத்தினால், அனைவரும் இணைய வர்த்தகம் மூலம் அதிகளவு பொருள்களை வாங்கி வந்தனர். ஆனால் தற்போது நிலைமை சீரடைந்த நிலையிலும், தொடர்ந்தும் இணையம் மூலமாகவே மக்கள் பொருள்களை வாங்கி வருகின்றனர். இதனால் இணைய வர்த்தகமானது மிகப்பெரிய வளர்ச்சி அடைந்துள்ளது. கார்பரேட் நிறுவனங்கள் சந்தையை பிடித்துள்ள காரணத்தால், உள்ளூர் வியாபாரிகளின் தொழில் நலிவடைந்து வருகின்றது. சிறு வணிகத்தையும், சில்லறை வணிகத்தையும் இந்த இணைய வர்த்தகம் நசுக்குவதாக பலர் குற்றம் சாட்டிவருகின்றனர் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் உண்மைதான். தொடர்ந்து மக்கள் இணைய வர்த்தகத்துக்கு ஆதரவு தெரிவித்தால் உள்ளூர் வியாபாரிகளின் தொழில் அழிந்து போகக்கூடிய சூழல் ஏற்படும் அபாயமும் உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. இணைய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க இணைய வர்த்தகமும் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது. தற்போது பண்டிகை காலம் துவங்கி உள்ளதால் இணைய வர்த்தக நிறுவனங்கள், வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்காக போட்டிபோட்டுக் கொண்டு சலுகைகளையும், தள்ளுபடிகளையும் அறிவித்து வருகின்றன.

இதேவேளை- வழங்க முடியாத சலுகைகளை வழங்கி மக்களை ஏமாற்ற எத்தனிக்கும் நிறுவனங்களும் இருக்கவே செய்கின்றன. வழங்கவேமுடியாத சலுகைகளை அறிவிக்கும் வலைதளங்களை நம்பி மக்கள் ஏமாறக் கூடாது.

இந்த வலைத்தளங்களிடம் கிரெடிட், டெபிட் கார்ட் விவரங்களைத் தெரிவிக்கக்கூடாது.

மேலும், இமோசடி



வலைத்தளங்கள், பிரபல நிறுவனங்களின் பெயர்களை. முறைகேடாக பயன்படுத்துகின்றமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.


இணைய வர்த்தகம் மேலோங்கிவரும் இந்தக் காலத்தில், அதன் ஆபத்தம்சங்களை மக்கள் ஆழ உணர்ந்துகொள்ள வேண்டும். இணைய வர்த்தகத்தளங்கள் சட்டப்பூர்வமாக இயங்குகின்றனவா என்பதை ஆய்வுசெய்ய வேண்டும். அந்த விற்பனையாளரிடம் பொருள்கள் வாங்கிய வாடிக்கையாளர்களின் மதிப்புரைகளை இணையத்தில் தேடி, படித்து உறுதிசெய்து கொள்ள வேண்டும். கவர்ச்சியான விளம்பரங்களைப் பார்த்து ஆசைப்படாமல், எச்சரிக்கையுடன் இருந்தால்தான், இந்த மோசடிகளில் இருந்து தப்பமுடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தில் ஈடிணையற்ற புகழ்சேர்க்கும் ஈழத்து மைந்தன் கப்டன் நவா ரமணன்





யாழ். வட்டுக்கோட்டை தாவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட கப்டன் நவா ரமணன், இங்கிலாந்தின் அரச மற்றும் இராணுவத் துறைகளில் திறம்படப் பணியாற்றி அவர் சார்ந்த துறையினரின் கௌரவத்தையும் பாராட்டையும் பெற்றிருப்பதுடன் தாம் பிறந்த நாட்டுக்கும் புகழ் ஈட்டித் தந்திருக்கிறார்.

கப்டன் ரமணன் இங்கிலாந்தின் நீதிஅமைச்சுடன் இணைந்த பல்வேறு வலையமைப்புகளின் பதில் இயக்குனராகப் பணியாற்றி வருவதுடன் அந்த நாட்டின் மூத்த அரச பணியாளர்களில் ஒருவராகவும் இனம் காணப்பட்டிருக்கிறார். தமது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சுமார் ஆயிரத்து 100 ஸ்தாபனங்களின் மூலோபாயங்களை வகுத்து இவர் நடைமுறைப்படுத்தி வருகிறார். இவற்றுள் நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், தலைமை அலுவலகங்கள் போன்றவை அடங்கும். தவிர, கணினித் தாக்குதல்களிலிருந்து அரச அமைப்புகளைப் பாதுகாக்கும் செயற்பாடுகளிலும் இவர் தம்மை ஈடுபடுத்தியுள்ளார்.

1984ஆம் ஆண்டில் பிறந்த இவர் தமது ஆரம்பக் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பெற்றுக்கொண்டார். தமது இடைநிலைக் கல்வியை பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் நிறைவு செய்த பின்னர் சிங்கப்பூரில் பட்டதாரிக் கல்வியை மேற்கொண்டதுடன், தமது முதுமானிக் கல்வியை இங்கிலாந்தில் கற்று நிறைவு செய்தார்.

19 தொழில் கற்கை நெறிகளைக் கற்று ஒரு சிறந்த கல்விமானாக உயர்ந்த இவருக்கு கல்வித்துறையில் ஒரு தனி இடம் உண்டு. மேலும் கப்டன் ரமணன் ஐந்து ஆண்டுகள் பிரிட்டிஷ் அரச திணைக்களங்கள் பலவற்றின் தலைமைத் தொழில்நுட்ப உருவாக்க வல்லுனராகப் பணியாற்றியிருக்கிறார். அத்துடன் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளின் வடிவமைப்பு மற்றும் உருவாக்கம் ஆகியவற்றுக்கான பொறுப்பும் இவருக்கே வழங்கப்பட்டிருந்தது. தமது பதவிக் காலத்தில் மக்களுக்கே முதலிடம் என்பதே இவரது தாரக மந்திரமாக இருந்தது. அதனால் திறமையானவர்களை உருவாக்குவதிலும் அவர்களை வளர்த்தெடுப்பதிலும் தமதுமுழுக் கவனத்தையும் செலுத்தியதுடன் அந்த இலட்சியத்தில் பெரும் வெற்றியையும் தனதாக்கிக் கொண்டிருக்கிறார். தமது வாழ்நாளில் ஒவ்வொரு மூச்சையும் தம்மை உயர் பதவிகளுக்கு உயர்த்திவிட்ட இங்கிலாந்துக்காக அர்ப்பணிக்க வேண்டும் என்ற தியாக சிந்தையுடனேயே வாழ்ந்து வருகிறார் இவர்.

அதனால் பிரிட்டிஷ் இராணுவத்தில் மேஜராக இருந்த தனது பெரியப்பாவின் அடிச்சுவட்டைப் பின்தொடர்ந்து தாமும் அதே இராணுவத்தில் இணைந்து ஓர் அதிகாரியாகப் பணியாற்றியிருக்கிறார். அந்தக்காலத்தில் பிரிட்டிஷ் பாதுகாப்புத் துறைக்கு வேண்டிய தொடர்பாடல் பற்றிய நிபுணத்துவ ஆலோசகராக இருந்ததுடன் அந்தத்துறை பெற்ற பல வெற்றிகளின் பின்னணியிலும் இவரே இருந்திருக்கிறார். அதேசமயம் இங்கிலாந்தின் றோயல் இராணுவ கல்வி நிலையத்தில் இணைந்து பயிற்சிபெற்றதுடன் பிரிட்டிஷ் இராணுவத்தில் கப்டன் பதவி நிலைக்கும் உயர்த்தப்பட்டு அதே இராணுவத்தில் பணியாற்றிய அதிகாரிகளுக்கு ஓர் உதாரண புருஷராக விளங்கி வருகின்றார்.

---

# நோயற்ற வாழ்வே நிறைவான செல்வம்

பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர்
உடுவில் மகளிர் கல்லூரி



மனித வாழ்க்கை என்பது பல்வேறு சவால்களுக்கு உட்பட்டதாக இருந்தாலும், நோய் என்பது பல்வேறு இன்னல்களையும் இடைஞ்சல்களையும் தோற்றுவிக்கின்றது. இதனால் தான் எமது முன்னோர்கள் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்றார்கள். எவ்வளவு வசதிவாய்ப்புக்கள் இருந்தாலும் உடலிலும், உள்ளத்திலும் நோய்கள் இருக்குமாயின் அது எமக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியது. ஆயுட்காலத்தை குறைக்க கூடியது. பொருளாதாரத்தை கீழ் நோக்கி கொண்டுசெல்லக் கூடியது. கல்விக்குத் தடையை ஏற்படுத்தும், ஆளுமையைக் குறைக்கும். இதனால் உயிர் இருந்தும் எந்தவித பிரயோசனமும் அற்றவர்களாக நடைபிணமாக இயங்கு நிலை அற்றவர்களாக சமூக நன்மதிப்பை இழந்து வாழவேண்டும்.

'சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்' என்பதற்கு அமைய நல்ல உடல், உள ஆரோக்கியம் இருந்தால்தான் ஒருவர் தனது நாளாந்த கடமைகளை செவ்வனே செய்ய முடியும். உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு சிறந்த சுகாதாரப்பழக்கமும், சிறந்த உணவுப்பழக்கமும், சிறந்த உடற்பயிற்சியும், ஓய்வும் அவசியமாகும்.

இவற்றை சரிவரக் கடைப்பிடிக்காத போது உடலில் நோய் ஏற்பட்டு உடல் பலவீனப்படுகின்றது. இதன்மூலம் உடல் உறுப்புகள் கூட செயல் இழந்து செயற்பாடு இல்லாது செல்கின்றது. நோய்களை தொற்றுநோய்கள், தொற்றாநோய்கள், குறைபாட்டு நோய்கள் என வகைகொள்ளலாம்.

தொற்றுநோய்கள் ஏற்படுவதற்கான மிகமுக்கியமான காரணம் நுண்ணங்கிகள். உடல் பலவீனமடையும் போது கிருமிகளின் ஆதிக்கம் கூடும். இதைத் தவிர்ப்பதற்கு, போசணைமிக்க இயற்கை உணவுகளை உட்கொள்ளல், சுய சுகாதாரத்தை உச்சஅளவில் கைக்கொள்ளல், சுற்றுப்புறச்சூழலை சுத்தமாக வைத்திருக்க கழிவு முகாமைத்துவ பொறிமுறையைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

தொற்றாநோய்கள் இன்று வீட்டுக்கு வீடு வாசல்படி என்பது போல வீடுகளில் உள்ள ஒருவரையேனும் இந்த தொற்றாநோய் தன் வசப்படுத்தாமல் இல்லை. அதாவது நீரிழிவு, கொலஸ்ரோல், உயர்குருதி அமுக்கம், புற்றுநோய், பாரிசவாதம், உள நோய் என்பனவே அவை. இந்த நோய்கள் வயது வேறுபாடு இன்றி மனிதர்களை தம் வயப்படுத்தி வருகின்றன. இதற்குக் காரணமாக எண்ணெய், சீனி, உப்பு, நிறைந்த உணவுகளை அதிகம் உட்கொள்ளல் விரவுணவுகளை அன்றாட வாழ்க்கையில் பழக்கப்படுத்திக்கொள்ளல், போசணையான இயற்கை உணவைத் தவிர்த்தல், உடற்பயிற்சியில் ஈடுபடாமை, ஓய்வு இல்லாமை, இரசாயன பொருள்களின் அதிக பாவனை, மகிழ்ச்சி இல்லாத வாழ்க்கை போன்றவற்றை குறிப்பிட்டுக்கொள்ளலாம். இதானால் நாள் ஒரு வண்ணமும் பொழுதொரு மேனியும் பலரும் மருத்துவமனைகளுக்கும் கிளினிக்குகளுக்கும் அலைகின்றனர். இவ்வாறான ஆரோக்கியமற்றவர்களால் எவ்வாறு ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும்? என்ற கேள்வி எழுகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு மாணவர்கள் மத்தியில் தொற்றாநோய்பற்றி விழிப்பை ஏற்படுத்த வேண்டும். இன்று மாணவ சமூகத்தையும் இந்தத் தொற்றாநோய்கள் அதிகம் ஆட்கொள்கின்றன. எனவே நோய்களை வரவேற்காது விரட்டியடிக்க சகல மாவட்டத்திலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் இயற்கையான போசணை உணவுகளை உண்பதற்கு பிள்ளைகளை ஊக்கப்படுத்த வேண்டும். இல்லையேல் ஆரோக்கியமற்ற சமூக அமைப்பே உருவாகும். ஆரோக்கியமற்ற சமூக அமைப்பால் எமது கல்வி, கலை, கலாசார, பண்பாடு, விளையாட்டு, அபிவிருத்தி என்பவற்றை பாதுகாக்கவும் வளர்க்கவும் முடியாது. 'நோயை விரட்டி நேர்த்தியாக வாழ்வோம்' இயற்கையின் படைப்பை இயன்றவரை பாதுகாப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்மா இளங்கோவன்

# ஈழம் கண்ட குழந்தைக் கவிஞர்கள்

குழந்தைகள் என்றாலே உள்ளம் இனிக்கும். அவர்களோடு பேசி மகிழ்வது மிகமிக இன்பம். அவர்களுக்காய்ப் பாடி, அதை அவர்கள் பாடி, ஆடி மகிழ்வதைப் பார்ப்பதும், கேட்பதும் அதினிலும் இன்பம். அதுவே குழந்தை இலக்கியப் படைப்பாளியின் மிகப்பெரும் இன்பம்.

தேனிலும் இனிய குரலினால் குழந்தைகள் பாடி, ஆடி மகிழ்வதைப் பார்த்து மகிழ்ந்திட எழுதுகோல் பிடிப்பவர்களே குழந்தை கவிஞர்கள். பூப்பூவாய் மலர்ந்திருக்கும் வண்ண முகங்களில் அறிவுச்சுடரையும் ஆனந்தத்தையும் ஒன்றாகக் காணத் துடிப்பவர்களே உண்மையான குழந்தைக் கவிஞர்கள். இந்த வகையில் ஈழத்திரு நாட்டின் குழந்தைகளுக்காகப் பாடிய கவிஞர்; பெருமக்கள் வரிசையில் பலர் உள்ளனர். மெச்சத்தக்க பாடல்களைத் தந்த இந்தக் கவிராயர்களின் பாடல்கள் சாகாவரம் பெற்றவையாக இன்றும்கூட தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்தும் குழந்தைகளால் பாடப்பெற்று வருகிறது. இதற்கு ஈடாக புதிய புதிய குழந்தைக் கவிஞர்கள் தோன்றி தங்கள் அரிய படைப்புகளை நல்குவது பாராட்டத்தக்கது.


குழந்தை இலக்கியத்தைப் படைக்கும் ஆற்றல், அதில் உள்ள நுட்பங்களுக்கு ஈடுகொடுத்து எழுதவல்ல குழந்தை இலக்கிய வல்லுநர்கள், ஈழத்தில் அதிகம் வளர்ந்து வருவது மகிழ்ச்சிக்குரியது. இந்த வளர்ச்சியைத் தமிழகத்தின் குழந்தை இலக்கிய முன்னோடிகளான, குழந்தை இலக்கிய வரலாற்றை எழுதிய டாக்டர் பூவண்ணன் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா போன்றோர் சான்றுகளுடன் நிறுவியுள்ளமை பெருமைக்குரியதே.

குழந்தைகளுக்காக எழுதமுன் குழந்தைகளிடம் படித்துவிட்டு வாருங்கள் - என்கிறார் அனுபவ முதிர்ச்சியுள்ள குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா. அழகான தரம்மிக்க குழந்தைப் பாடல்களைத் தந்த கவிஞரின் பாடல்கள் மிகவும் பிரபல்யமானவை என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டிய உண்மை. இவரது பாடல்கள் இனிமை, எளிமை, ஓசைநயம், அறிவுரை, நகைச்சுவை யாவும் இணைந்து குழந்தைகளைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

இவ்வாறு குழந்தை இலக்கிய வளர்ச்சி தமிழகத்தோடு ஒத்து, ஈழத்தில் எவ்வாறு ஓங்கி வளர்ந்து வருகிறது என்பதை இங்கே சற்று நோக்குவோம்.

தங்கத்தாத்தா என அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரே ஈழத்தில் குழந்தை இலக்கிய வரலாற்றின் முன்னோடியாகக் காணப்படுகின்றார். இவரது 'ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை' என்னும் பாடல் இன்றளவும் வரும் ஒவ்வொரு ஆடிப் பிறப்பு நாளன்றும் தமிழ் மக்கள் நாவில் ஒலிக்கும் மிகப் பிரபல்யமான குழந்தைப் பாடலாகும்.

ஆடிப்பிறப்பை விடுதலை தினமாகக் கொண்டாடிக் குழந்தைகள் இந்தப் பாடலைப் பாடி இறைவழிபாட்டுடன் கூழ், கொழுக்கட்டை உண்டு மகிழ்ந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.
















'வீமா வீமா ஓடிவா அணில் வேட்டையாடிப் பிடித்தூட்டுவேன் வா வா' என்னும் புலவரின் நகைச்சுவை ததும்பும் பாடல் மிகப் பிரசித்தமானது. பாலர்பாட நூலிலும் இந்தப்பாடல் அன்று இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத் தக்கது. இது 'தாடி அறுந்த வேடன்' என்னும் தலைப்பில் அமைந்த பாடலாகும்.

இப்பாடல் கவிஞர் அழ.வள்ளியப்பாவின் 'கடலின் ஆழம்' என்ற தலைப்பில், 'கடலின் ஆழம் எனது வாலின் நீளம் தானடா' எனத் தன் வாலால் கடலின் ஆழத்தை அளந்த நரியாரின் கதைப்பாடலுடன் ஒப்புநோக்கத் தக்கது கருத்தாழமுள்ளது குழந்தைகளுக்கினிய நகைச்சுவைப் பாடலாகும். இத்தகைய வேடிக்கையான பாடல்கள் குழந்தைகள் மனதில் இலகுவில் படமாகப் பதிந்துவிடும் என்பது மறுப்பதற்கில்லை. மேலும் தங்கத் தாத்தாவின், ஒரு பெண்ணின் கற்பனை மிகுதியால்; தன்னிலை மறந்து தன் பால்க் குடத்தை உடைத்த பவளக் கொடியின் கதைப்பாடல்... 'பருத்தித்துறை ஊராம் பவளக்கொடி பேராம் பாவைதனை ஒப்பாள் பாலெடுத்து விற்பாள்' என்ற கருத்துமிக்க பாடலும், 'கத்தரித் தோட்டத்து வெருளி' என்னும் நகைச்சுவைப் பாடலும் இன்றும் சிறுவர்களால் விரும்பிப் பாடப்படுகிறது.

சிறுவர்களுக்காகப் பாடிய தங்கத்தாத்தா பெரியவர்களுக்காகவும் பெருமளவு பாடல்களையும், நாடகங்களையும் படைத்துத் தந்துள்ளார். 'பிள்ளைப் பாட்டு' என்னும் நூலில் 'சிறுவர் சல்லாப நாடகம்' என்னும் கவிதை நாடகத்தை முதன்முதலில் குழந்தைகளுக்காக எழுதியவர் சோம சுந்தரப் புலவரேயாவார். இவரது சிறுவர் பாடல்கள் 'சிறுவர் செந்தமிழ்' நூலாக வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 1886ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் தம்பிமுத்துப்பிள்ளை என்பவர் எழுதிய 'பாலியக் கும்மி' என்னும் கவிதை நூல் சிறுவர்களின் முதலாவது பாட நூலாக வெளிவந்தது. இந்தக்குறிப்பு பிரித்தானியப் பொருள்காட்சிச்சாலையில் உள்ள புத்தகப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. 1918 ஆம் ஆண்டு ச.வைத்தியநாதர் என்பவரால் 'தமிழ்ப் பாலபோதினி' என்னும் குழந்தைக் கவிதை நூல் வெளிவந்தது.

'கை வீசம்மா கைவீசு', 'என் தாயே' போன்ற சிறந்த பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. தொடர்ந்து 1935ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினரால் 'பிள்ளை பாட்டு' என்னும் குழந்தைப் பாடல் தொகுதியும் வெளிவந்தது. இப்பெரும் முயற்சிக்கு அந்தக்கால வட பெரும்பாக வித்தியாதரிசியாகவிருந்த அருணந்தியின் ஊக்குவிப்பும் காரணமாக அமைந்தது.

இவ்வாறு தொடர்ந்த குழந்தை இலக்கிய வளர்ச்சியில், கவிஞர்கள் வித்துவான் க.வேந்தனார், கவிஞர் யாழ்ப்பாணன், முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி, இரசிகமணி கனகசெந்திநாதன், அல்வாயூர் மு.செல்லையா, பண்டிதர் க.வீரகத்தி, கவிஞர் ம.பீதாம்பரன், வித்துவான் சி.குமாரசாமி, மதுரகவி இ.நாகராஜன், கவிஞர் எம்.ஸி.எம். ஸுபைர், சாரணாகையூம், கல்வயல் வே.குமாரசாமி, பா.சத்தியசீலன், திமிலை மகாலிங்கம், பி.பி.அந்தோனிப் பிள்ளை, ச.அருளானந்தன், கவிஞர் த.துரைசிங்கம், திமிலைத்துமிலன், புலவர் ம.பார்வதிநாதசிவம், மு.பொன்னம்பலம் போன்ற பற்பல கவிஞர்கள் பங்கெடுத்துள்ளனர். இன்னும் புதிய புதிய கவிஞர்கள் தோன்றிய வண்ணமே உள்ளனர்.

இவர்களின் பணிகள் மேலும் மேலும் தொடர்வது சிறுவர் இலக்கிய உலகுக்குப் பெருமகிழ்வே. சிறுவர் இலக்கியத்துக்கு உரமூட்டும் இவர்களின் சேவை சிறார்களின் தேவை..!

அடுத்த வாரம் தொடரும்...

# புத்தக அரங்கம்

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது நிறைவு தினத்தை முன்னிட்டு 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டுவரும் புத்தக அரங்க விழாவின் பன்னிரண்டாவது நிகழ்வு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் கடந்த 23ஆம் திகதி தொடக்கம 25ஆம் திகதி வரை இடம்பெற்றது.

கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இப் புத்தக அரங்க விழாவின் இடண்டாம் நாள் நிகழ்வான ஈழத்து நூல்களை அறிவோம் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் கவிஞரும், சட்டத்தரணியுமான சோ.தேவராஜா தலைமையில் இடம்பெற்றது.

இதில் நூல் அறிமுக உரைகளை கு.புவிராஜாவின் "சங்கை நகர்" நூல் தொடர்பாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வட மாகாண பணி நிறைவு நிலைப் பணிப்பாளர் தி . சிவதட்சணாமூர்த்தி, அழ.பகீரதனின் "ஐப்பசியில்" கவிதைத் தொகுப்பு பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி அனற்ஜெனா ஜெறாட், வ.சிவஜோதியின் "என் எண்ண ஓட்டத்தில்..." நூல் தொடர்பாக ஊடகரும், எழுத்தாளருமான அராலியூர் நிலா, கணேசபிள்ளை சிவகரனின் "கிராமியப் பாடசாலைகளில் பதின்ம வயதினர்" நூல் தொடர்பாக உளவளத்துணையாளரும், ஆசிரியருமான சங்கமித்தா ஜெயக்குமார் ஆகியோர் ஆற்றினார்கள்.

நிகழ்ச்சித்தொகுப்பினை மாணவியரான ரா.புவியழகி, கு.நிரோஜினி ஆகியோர் மேற்கொண்டனர்.

நூல் அறிமுக நிகழ்வைத் தொடர்ந்து, சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் மருத்துவப்





பேராசிரியர் நந்தியின் சிறுகதையைத் தளுவி ஆசிரியர் பு.கணேசராசாவினால் நெறியாள்கை செய்யப்பட்டு பதினைந்துக்கு மேற்ப்பட்ட அரங்குகளைக் கண்ட "காதலுக்கு மருந்து" நாடகமும், அதேபோல், சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில், பு.கணேசராசாவின் நெறியாள்கையில் உருவாகி, ஐந்துக்கு மேற்பட்ட அரங்குகளைக் கண்ட "பச்சை மரமும் படும்" நாடகமும் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன இயக்கமும் மகிழ்ச்சியான வாழ்வும்

பி.முத்துலிங்கம்
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்.



**மனம், மகிழ்ச்சி என்பன அன்றிலிருந்து இன்றுவரை சமயங்களிலும், தத்துவங்களிலும், காவியங்களிலும் நடைமுறை வாழ்க்கையிலும் உச்சரிக்கப்படும் சொற்களாகும்.** கிரேக்க தத்துவஞானி பிளாட்டோ, 'மனம் என்பது மனிதனுக்குள் ஓர் மனிதன்' என்றார். உளவியலாளர் சிக்மன் பிராய்ட் மனம் என்பதைப் பகுப்பாய்வு செய்து நனவு மனம், நனைவிலி மனம், உயர்மனம் என மூன்றாகப் பிரித்து ஆழ் மனதில் புதைந்திருக்கும் நிறைவேறாத எண்ணங்களே மன நோய்க்கும் பின்னர் உடல் நோய்க்கும் காரணமாகின்றது என்றார். கருத்து முதல்வாதிகள் மனம்பற்றிக் குறிப்பிடும் போது, 'மனதின் பிரதிபலிப்பே நாம் காணும் இயற்கைச் சமுதாயம் |மனிதன்' என்பார்கள். பொருள்முதல்வாதிகளோ மாறாக பிரபஞ்சம், இயற்கைச் சமுதாயத்தின் பிரதிபலிப்பே மனம் என்பார்கள். இருசாராரும் மனதின் கட்டமைப்பை ஏற்றுக் கொள்கின்றார்கள். அவ்வாறாயின் அறிவு மற்றும் உணர்வுகளின் தொகுப்பே மனம் எனலாம். மனிதன் சிந்தனை மற்றும் உடல் அங்கங்களின் செயற்பாடுகள் வாயிலாகவே கருத்துகள் மற்றும் உணர்வுகளைப் பெறுகின்றான். மனம் பற்றிப் பெரிதும் அலட்டிக்கொள்ளாத மனிதனிடம் இருப்பது அறிவு மற்றும் உணர்வுகளின் தொகுப்பே ஆகும் - என்கிறார்.

எமது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் மற்றும் ஏனைய பொருள்கள் என்பவற்றுக்கு மேலதிகமாக அல்லது மிகையாக ஆசைப்படுகின்றபோது போட்டி, பொறாமை, கவலைகள் எம்மை ஆட்கொள்கின்றன. இதனால் எமது மன இயக்கத்தில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகின்றன. இதனையே மன அழுத்தம், மனக்கவலை என்கின்றோம்.

போரால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையில், இத்தகைய மனக் கவலைகளுடனும் மன அழுத்தத்துடனும் வாழ்வோர் பலர். குறிப்பாக, வடக்கு - கிழக்கு மற்றும் நாட்டின் கரையோரப் பகுதிகளில் வாழ்வோர் கடந்த முப்பது ஆண்டுகளாக போரின் வடுக்களை சுமந்துகொண்டு வாழ்கின்றனர். அத்துடன் இவர்கள் பல்வேறு இடப்பெயர்வுகளுக்கு முகம் கொடுத்துள்ளனர், காயமடைந்துள்ளனர், தடுத்து வைக்கப்பட்டுள்ளனர், சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளனர், தமது குடும்ப உறுப்பினர்கள் பலரையும் நண்பர்களையும் இழந்துள்ளனர். மட்டுமல்லாமல், தமது வீடுகளை, தொழில் வாய்ப்புகளை, மற்றும் பெறுமதிமிக்க பல்வேறு வளங்களை இவர்கள் இழந்து வாழ்கின்றனர்.

இதனால் முழுச் சமூகத்தின் வாழ்வாதாரமும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய சூழல் முறைமைகள் அதாவது வாழ்வு முறைமை சீர்குலைந்துள்ளது. இவற்றின் ஒட்டுமொத்த விளைவால் சமூக இழைகள் அறுந்துள்ளன. உள ஆற்றுப்படுத்தல், உளப்பிணிச் சகிச்சை, நடத்தை மற்றும் அறிவாற்றல் சிகிச்சைகள் என்பன பாதிக்கப்பட்டவரை பழைய நிலைக்கு கொண்டுவர உதவும்.

மேலும் இதற்கான நல்லிணக்கம், உண்மையைக் கண்டறிவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லையாயினும் பாதிக்கப்பட்ட மக்கள் உண்மையைக் கண்டறிந்து செயற்படுவதன் மூலமும் தம்மை ஆற்றுப்படுத்துவதன் வழியாகவும் மனக்காயங்களை மனக்கவலைகளைப் போக்கலாம்.

போதையும் துர்நடத்தைகளும்

இன்று மன இயக்கத்துக்கும், மகிழ்ச்சியான வாழ்க்கைக்கும் போதைப்பொருள் பாவனையும் அதனால் ஏற்படும் துர்நடத்தைகளும் பெரும் சவாலாக மாறியுள்ளன. இளைஞர்கள், யுவதிகள் மட்டுமல்லாமல் பாடசாலை மாணவர்களும் இன்று இந்தப் போதைப்பொருள் கலாசாரத்துக்கு அடிமையாகியுள்ளனர்.

உலகில் ஆண்டுதோறும் இடம்பெறும் சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்தின் பெறுமதி சுமார் 15 ஆயிரம் பில்லியன் டொலர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அதீதபோதைப்பொருள் பாவனையால் பாலியல் துர்நடத்தைகளும் நாளுக்குநாள் மலிந்து வருகின்றன.

பாலியல் துர்நடத்தைகள், வன்புணர்வுகள் மலிந்த பூமியாக இந்த உலகம் மாறிவருகின்றது.

உடலையும் உள்ளத்தையும் வதைக்கும் இந்தப் போதைப்பொருளுக்கு எதிராக நாம் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இதன்மூலம் மகிழ்ச்சியான வாழ்வை நாம் எம் சமூகத்தில் கொண்டுவர முடியும். ■

# பிரபஞ்சம் பற்றிய இயற்பியல் பிரக்ஞை



மருத்துவர் சி.யமுனாநந்தா

சக்தித் திணிசுகளின் சேர்க்கையாலேயே பிரபஞ்சம் அமைகின்றது. காலம், வெளி என்பவற்றுக்கு அப்பாலான புள்ளியில் இருந்து பிரபஞ்சத்தை நோக்கும்போது அது வெவ்வேறு சக்தித் துணிக்கைகளால் உருவாக்கப்பட்டமை தெரியவரும். இந்தச் சக்தித் துணிக்கைகள் பிரபஞ்சத்தில் பாயியாக காலவெளியில் பிரவாகிக்கின்றன. இந்தச் சக்தித்திணிசுகள் ஒன்றையொன்று கடப்பதில்லை. சக்தித்திணிசுகள் தொடக்கமுமற்றன; முடிவுமற்றன. சூரியன், பூமி, சந்திரன், வான்பொருள்கள் வெவ்வேறு சக்தித்திணிசுகளால் ஆனவை. சக்தித்திணிசுகளின் பிரவாகம் வெள;வேறு சார்பு ஆள்கூற்றில் இயங்கும். இதுவே காலம், வெளி என்பவற்றின் சார்நிலை ஆகும். காலவெளிப்பயணம், கருந்துளைகள், வெண்துளைகள், வெளிஒடுங்கல் என்பன பற்றிய கருதுகோள்கள் பிரபஞ்ச பிரக்ஞை குறித்த மாதிரி அமைப்புக்களை உருவாக்குவதற்கு நவீன விஞ்ஞானத்தில் உதவுகின்றது. மனிதன் நாகரீகம் அடையும்போது அவனுடைய காலத்தின் கண்ணாடிகளுக்கு ஏற்ப பிரபஞ்சம் பற்றிய உய்ந்தறிதலிலும், வளர்ச்சி அடைந்து செல்லும். இதன் மிக அண்மைய ஆராய்ச்சிகளை நாம் விளக்கமுற முனைதல் பௌதீக விஞ்ஞான மாணவர்களுக்கு ஆர்வத்தினை ஏற்படுத்தும்.

காலவெளியின் சிறப்புப்புள்ளியின் ஈர்ப்புத்திணிசுகள் ஒளியலைகளாக மாற்றமடையும் என விஞ்ஞானிகள் கருதுகோளினைத் தற்போது உருவாக்கி உள்ளனர். இது அகிலத்தின் இயற்பியலில் புதிய பரிமாணத்தினை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது. சாதாரண நிபந்தனைகளில் இல்லாததில் இருந்து உள்ளதை உருவாக்க முடியாது. விசேட நிபந்தனைகளில் உப அணுத்திணிசுகளில் நிறையற்ற திணிசுகளை நிறையுள்ள திணிசுகளாக மாற்றலாம்.

ஒளிப் பிரவாகமான போட்டோன்கள் திணிவற்றவை. வேறு துணிக்கைகளாக மாறாது. போட்டோன்கள் அதன் பருமனுடைய உப அணுத்திணிசுகளுடன் மொத்தலடையும்போது அவ் உபஅணுத்திணிசுகள் பிரிந்து இலத்திரனும், பொசித்திரனும் உருவாகும். இவை திணிவுடையவை. ஈர்ப்புத்துணிக்கைகள் வெவ்வேறான வகைநிலைகளில் இருக்கலாம். ஒரு துணிக்கையின் இயக்கம் காலவெளியின் ஆள்கூற்றின் மாற்றத்தினால் தீர்மானிக்கப்படும். ஈர்ப்புவிசையினால் திணிசுகள் உருவாக்கப்படும்.

ஈர்ப்புவிசையின் அடிப்படை அலகுகளான கிராவிட்டன் திணிசுகளின் அளவு, ஈர்ப்புவிசையின் இழுவையினைத் தீர்மானிக்கின்றன. கிரவிட்டோன் பற்றிய விளக்கங்கள் தெளிவாக இல்லாதபோதிலும், இவை குவாண்டம் அடிப்படைத் துணிக்கைகளாக மாற்றங்களுக்கு உட்படுபவையாக அமைகின்றன.

தற்போது ஆய்வுகூடத்தில் அடையமுடியாத பௌதீகநிலையில் அகிலத்தின் ஆரம்பத்தில் நெருக்கமாக திணிவும் சக்தியும் வெப்பமாக அமைந்திருந்தன. இந்நிலையில் அண்டத்திணிசுகளில் ஈர்ப்பு அலைகளே குறிப்பிடத்தக்க மாற்றங்களை உருவாக்கி உள்ளது. அண்டத்திணிசுகளின் மொத்தல்களுக்கு ஈர்ப்பு அலைகளே காரணமாயிருந்தன என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அண்டத்திணிசுகளுக்கு ஈர்ப்பு அலைகளால் ஏற்பட்ட மொத்தல்களின் விளைவாக காலவெளிப்பாயம் மாற்றத்துக்கு உள்ளாகியது. சாதாரணமாக ஈர்ப்பு அலைகள் நலிதான விசையினையே அணுத்துணிக்கையின்மீது பிரயோகிக்கின்றது. இதனால் அணுத்துணிக்கையில் சிறிய இடப்பெயர்வு ஏற்படும். இடப்பெயர்வு அணுக்கருவின் பருமனிலும் சிறியது. அகிலத்தின் ஆரம்பநிலையில் ஈர்ப்பு அலைகளின் செறிவு அதிகமாகவும் அதன் தாக்கம் அதிகமாகவும் இருந்தது. அகிலத்தின் ஆரம்பநிலையில் ஈர்ப்புஅலைகள் ஊசலுற்று வலிமையடைந்தன. அத்தருணத்தில் அகிலத்தில் வேறு யாதாயினும் இருந்திருப்பின் அப்பொருள்களும் இவ்வீர்ப்பு அலைகளால் தாக்கத்துக்கு உட்பட்டிருக்கும். ஈர்ப்புவிசை அலைகள் திணிவுகளை அடர்த்தியான கூட்டங்களாக்குவதை திரும்பத் திரும்பச் செய்கின்றன.

மின்காந்த அலைகளும் ஈர்ப்புவிசை அலகுகளால் பாதிக்கப்படலாம். காலவெளியின் வளைவுகள் ஈர்ப்பு அலைகளில் பருமனைக் கட்டுப்படுத்தும். கதிர்வீச்சின் வலிமையானது போட்டோன்களை உருவாக்கி ஈர்ப்புத்திணிசு ஒளியாக காழலுறும். அகிலத்தில் தொடக்க நிலையில் விரிவாகும் தன்மையதாக இருந்தநிலையில் சாதாரண ஈர்ப்பு அலைகள் குறைந்த வாழ்தகவினை உடையதாக இருந்தது. அகிலத்தின் ஆரம்பநிலையில் போதியளவில் சடத்துவம் இருந்தது. இதனால் ஒளியின் வேகம் குறைவாக இருந்திருக்கும். அகிலத்தின் ஆரம்பத்தில் ஈர்ப்பு அலைகளின் நிகழ்வினை நீண்டகாலத்திற்கு வைத்து மிகையான போட்டோன்களை அதாவது ஈர்ப்பு விசைத் திணிசுகள் ஒளியலைத் திணிசுகளாக உருவாகியிருக்கலாம். அகிலத்தில் சடத்துவத்தின் உருவாக்கத்தினாலும், அகிலத்தின் விரிவிலும் ஈர்ப்புத்திணிசு தாக்கம் செலுத்துகின்றது. இது பிரபஞ்சம் பற்றிய புதிய பிரக்ஞையாக அமைகின்றது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை(PSDG), சபைநிதி வேலைத்திட்டம் - கட்டம் I - 2023
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பபாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்த தாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப் பட்ட 03/2020(i) ஆம் இலக்க 2021.01.11 ஆம் திகதி 04/2016(iii) ஆம் இலக்க 2021.02.18 மற்றும் 04/2016(iv) இலக்க 2023.02.09 ஆம் திகதி பொது நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வட மாகாணத்தை சார்ந்தவர்களுக் கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 5381) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களில் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 28.06.2023ந் திகதியிலிருந்து 11.07.2023ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர்,உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 12.07.2023ந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிரா கரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப்பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2023.07.05 ஆம் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்வி தாரர்கள் கலந்துகொள்ளமுடியும்

10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை(PSDG) - 2023

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுப டியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | மாரீசன்கூடல் கடற்கரை வீதி புனரமைப்பு NP/14/41(16)/W/PSDG/2023/10 | 2.60 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 12.09.2023 | 26,100.00 | 10.10.2023 |
| சபை நிதி வேலைத்திட்டம் 2023 | | | | | | | |
| 1 | i) கட்டுடை 20 வீட்டுத்திட்ட வீதி புனரமைப்பு,மானிப்பாய் மேற்கு ii)ஆனந்தா வைரவர் கோவில் வீதி புனரமைப்பு,மானிப்பாய் கிழக்கு தெற்கு NP/14/41(16)/W/CF/2023/11 | 3.25 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 12.09.2023 | 32,600.00 | 10.10.2023 |
| 2 | i) மூணாமலை வீதி புனரமைப்பு,சுதுமலை தெற்கு ii) கூழாவடி - 3ம் ஒழுங்கை,சாவற்கட்டு NP/14/41(16)/W/CF/2023/12 | 2.61 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 12.09.2023 | 26,100.00 | 10.10.2023 |
| 3 | i) ஆனைக்கோட்டை 3ம் கட்டை ஒழுங்கை புனரமைப்பு,ஆனைக்கோட்டை ii) 3ம் கட்டை லூர்த்துநாயகி வீதி புனரமைப்பு,உயரப்புலம் NP/14/41(16)/W/CF/2023/13 | 2.99 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 12.09.2023 | 30,000.00 | 10.10.2023 |
| 4 | i) சின்னப்பா வீதி 2ம் கிளை- ஒழுங்கை புனரமைப்பு, நவாலி கிழக்கு ii )புலவர் வீதி 6ம் கிளை ஒழுங்கை(முதியோர் சங்கவீதி) நவாலி வடக்கு NP/14/41(16)/W/CF/2023/14 | 3.19 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி | 12.09.2023 | 31,900.00 | 10.10.2023 |
| 5 | i) கம்மாலை வீதி 1ம்ஒழுங்கை புனரமைப்பு, சண்டிலிப்பாய் மேற்கு NP/14/41(16)/W/CF/2023/15 | 1.40 | 60 நாட்கள் | C9,and C8 (வீதி | 29.08.2023 | 14,100.00 | 26.09.2023 |
| 6 | i) பற்றிமா வீதி கிளை ஒழுங்கைகள்,பண்டத்தரிப்பு iii) சண்டிலிப்பாய் வீதி (அமிர்தலிங்கம் வீதி) 4ம் குறுக்குத்தெரு, பிரான்பற்று NP/14/41(16)/W/CF/2023/16 | 2.90 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி | 12.09.2023 | 29,000.00 | 10.10.2023 |
| 7 | i) சென்யூட் சங்கக்கடை வீதி, இளவாலை ii) நாட்டாத்தி வீதி,மாதகல் கிழக்கு NP/14/41(16)/W/CF/2023/17 | 3.92 | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி | 12.09.2023 | 39,200..00 | 10.10.2023 |
| 8 | i)விஸ்வா மில் வீதி,மாகியப்பிட்டி ii)பெரியவிளான் உயரப்புலம் கிளை வீதி NP/14/41(16)/W/CF/2023/18 | 2.63 | 60 நாட்கள | C9, C8 and C7 (வீதி | 12.09.2023 | 26,300.00 | 10.10.2023 |
| 9 | i) அரசடி வீதி 2ம் ஒழுங்கை,வடலியடைப்பு ii)சிறி அம்பாள் வீதி,சில்லாலை வடக்கு NP/14/41(16)/W/CF/2023/19 | 2.65 | 60 நாட்கள | C9, C8 and C7 (வீதி | 12.09.2023 | 26,600.00 | 10.10.2023 |
| 10 | போதி மயானம் திருத்தம் NP/14/41(16)/W/CF/2023/20 | 0.63 | 45 நாட்கள் | C9, and C8 (கட்டடம்) | 29.08.2023 | 6,300.00 | 26.09.2023 |
| 11 | சாவற்கட்டு சந்தை திருத்தம் NP/14/41(16)/W/CF/2023/21 | 0.75 | 60 நாட்கள் | C9, and C8 (கட்டடம்) | 29.08.2023 | 7,500.00 | 26.09.2023 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய்.**

**28.06.2023**

## பெயர்மாற்றம்

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியில் வதியும் **பஞ்சலிங்கம் சுறேஜன்** ஆகிய நான் எனது பெயரை **பஞ்சலிங்கம் சுரேஸ்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **பஞ்சலிங்கம் சுரேஸ்** என்றே கையொப்பமிடுவேன் என்று இலங்கைசோசலிச குடியரசு மக்களுக்குத் தெரியப் படுத்துகின்றேன்.

(CS/ 51042)AH-1

**- பஞ்சலிங்கம் சுரேஸ் -**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**மச்சேந்திரகுமார் விமலாதேவி**
**திதி: தசமி**

விடிந்திடும் பொழுதுகள்
விழி உன்னை தேடுடுதே
விழியோரம் கண்ணீரை
விமலா நீ தந்ததேனோ?
விரும்பிய கணங்களிலே
விரைந்தோடி வாருமம்மா...

மண்ணில் 02.12.1958
விண்ணில் 09.07.2022

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 16.05.2023 செவ்வாய்க்கிழமை எதிர்பாராத
தீ விபத்தின் போது சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
**கலாநிதி கார்த்திகேசு திருப்பதி**

தமிழ் ஒரு கண், சைவம் மறு கண்
தளராது இருக்கவும் தளைத்து வளரவும்
தன்னார்வத்துடன் தன்னிகரன்றி
செயற்பட்ட செயல் வீரன்

புறத்தழகை புறத்தொதுக்கி - அகத்தழகை
அன்பாலும் அறிவாலும் அமைத்த ஆன்றோன்
ஈன்றோர்க்கு பெருமை சேர்த்த
இனிய சமூகச் சான்றோன்.

மண்ணில் இறை பணியில் இருந்தீர்
விண்ணில் இறை பணியில் இணைந்தீர் - நீர்
இறையடியில் இனிதாய் வாழ்ந்திருப்பீர் - நாம்
இனிய நினைவுகளுடன் வாழ்ந்திருப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (29.06. 2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கட்டுப்பாலனை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

**குடும்பத்தினர்**

(CS 253773) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் போர்க்குற்றம் இஸ்ரேலையும் விசாரிக்குக!

## ஜெருசலேம் சட்டத்தரணியொருவர் வலியுறுத்து

கொழும்பு; ஜூன் 28

இலங்கையில் உள்நாட்டுப் போர் இடம்பெற்றவேளையில், இஸ்ரேல் இலங்கைக்கு வழங்கிய ஆயுத உதவிகள் தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டும் என்று ஜெருசலேமைச் சேர்ந்த மனித உரிமை சட்டத்தரணியும் ஊடகவியலாளருமான எயிற்றே மக் வலியுறுத்தியுள்ளார்.

ஜெருசலேமைச் சேர்ந்த அவர், நீண்ட காலமாக பலஸ்தீனர்களுக்கு எதிராக ஜெருசலேமிலும் கசாவிலும் நடக்கும் அடக்குமுறைகளை சர்வதேச ஊடகமான அல் ஜசீராவில் வெளிப்படுத்தி வருகின்றார். இந்த நிலையில், அவர் தற்போது 'இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கு இஸ்ரேல் துணைபோனது தொடர்பில் விசாரிக்கப்படவேண்டும்'என்றுவலியுறுத்தியுள்ளார்.

நானும், இஸ்ரேலிய மனித உரிமை அமைப்புகளும், அவற்றின் செயற்பாட்டாளர்களும் திரட்டிய சான்றுகள், இலங்கையில் நடந்த அட்டூழியங்களில் இஸ்ரேலிய ஆயுதங்களும், இராணுவ உபகரணங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதை வெளிப்படுத்துகின்றன. இந்தக் குற்றங்களில் இஸ்ரேலின் உடந்தையை அம்பலப்படுத்தவும், வழக்குத் தொடரவும் நாங்கள் விரும்புகிறோம். இலங்கையில் உள்ள கொலைகார அரசுக்கு ஆயுதங்கள் மற்றும் பயிற்சிகளை மற்ற நாடுகளும் வழங்கின. இருப்பினும், இஸ்ரேலிய ஆய்வாளர் ஷ்லோமி யாஸின் கூற்றுப்படி, 'வழங்கப்பட்ட ஆயுதங்களின் நோக்கத்தில் இஸ்ரேல் தனித்து நிற்கிறது. போருக்குப் பின்னர் இஸ்ரேலுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட இலங்கையின் முன்னாள் தலைமை அதிகாரி டொனால்ட் பெரேராவும் ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். இலங்கையில் இடம்பெற்ற குற்றச் செயல்களில் ஈடுபட்ட இஸ்ரேலியர்களுக்கு எதிராக குற்றவியல் விசாரணையை ஆரம்பிக்குமாறு இஸ்ரேலின் சட்டமா அதிபரிடம் கோரிக்கையை முன்வைக்க தீர்மானித்துள்ளோம், அதனை சர்வதேச அரங்கிலும் செய்வோம் என்றும் அவர் அல் ஜசீராவுக்கு எழுதிய பத்தியில் வலியுறுத்தியுள்ளார். (ம-6)

### உள்நாட்டுக்...

கம்பஹாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2022ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கையின் மொத்த அரச கடன் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) 83 ஆயிரத்து 700 மில்லியன் டொலராகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128.3 வீதம். 2022ஆம் ஆண்டின் இறுதியில், மொத்த வெளிநாட்டுக் கடன் தொகை 41 ஆயிரத்து 500 மில்லியன் அமெரிக்க டொலர். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 63.6 வீதமாகும். அப்போது மொத்த உள்நாட்டுக் கடன் தொகை 42 ஆயிரத்து 100 மில்லியன் அமெரிக்க டொலர். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 64.6 வீதம்.

நாட்டின் கடனை மறுசீரமைக்காமல் பேணினால், 2035ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100 வீதத்துக்கும் அதிகமான அரச கடன் இருக்கும். வெளிநாட்டு கடன் வழங்குநர்கள் நாட்டின் கடனை மறுசீரமைக்க ஏற்கனவே உடன்பட்டுள்ளனர். இலங்கையில் கடன் நிலைத்தன்மையை உருவாக்குவதற்கு, கடன் மறுசீரமைப்பு அவசியமானது மற்றும் உள்நாட்டுக்கடனும் மறுசீரமைக்கப்படவேண்டும்.

எதிர்வரும் 5 வருடங்களில் மாத்திரம் 17 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு கடன் வழங்குநர்களிடமிருந்து பெறப்படும். அதற்கிணங்க எமது உள்நாட்டு கடன்வழங்குநர்களும் இதற்கு பங்களிக்கவேண்டும். பொதுமக்களின் வங்கி வைப்புகளை பாதுகாக்கும் முதன்மை நோக்கத்துடன் இந்தப் பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனைத்து வங்கிகளின் வங்கி வைப்பாளர்களையும் பாதுகாப்பது பெரும் பொறுப்பாகும்.

அதற்கமைய, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு முறையின்படி வங்கி வைப்பாளர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. வங்கி முறைமை வீழ்ச்சியடையாது. இது பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பக்கூடிய மறுசீரமைப்புக்கு வழி வகுக்கும். நாட்டின் பொருளாதார மீட்சி, வட்டி விகிதக் குறைப்பு, அரசாங்கம் இலகுவாக மானியங்கள் வழங்க முடிந்தமை, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள கடன் சுமை அடுத்த 10 வருடங்களில் குறைந்து அதன் மூலம் கிடைக்கும் பயன்களை நாட்டு மக்களுக்கு வழங்கமுடியும் - என்றார். (அ-ம)

### ஹெரோய்னுடன்...

கொண்டைதீவு சுற்றிவளைப்பில், உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னுடன் நால்வர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவு உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டசுற்றிவளைப்பின்போதே மேற்படி நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதான நால்வரிடமிருந்து முறையே இரண்டரை கிராம், ஒன்றரை கிராம், 60 மில்லிகிராம், 50 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது.

கைதான சந்தேகநபர்கள் 22 - 27 வயதுடையவர்கள். அவர்களுக்கு எதிரான சட்டநடவடிக்கைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டன. (அ-ம-26)

### கடுமையான...

உள்ளிட்ட பெரும் சீர்திருத்தங்களைச் செய்தால் அது நாட்டின் பொருளாதாரத்திலும் வங்கி முறையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை பேராசிரியர் சி.விஜயகுமார் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்புத் தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக நெருக்கடிகளைத் தணிக்கும் பொருட்டு சர்வதேச நாணய நிதியம் 2.9 பில்லியன் டொலரை கடனாக இலங்கைக்கு வழங்கச்சம்மதித்து அதற்கான முதற்கட்ட நிதியும் வழங்கப்பட்டுவிட்டது. ஒவ்வொரு மீளாய்வுக்குப் பின்னரே நாணய நிதியம் தன் உதவித்தொகையை விடுவிக்கும். அந்த வகையில் முதற்கட்ட நிதிக் கையளிப்புக்குப் பின்னர், உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களை விரைவாக மறுசீரமைக்குமாறு நாணய நிதியம் இலங்கையை வலியுறுத்தி வந்தது. இதன் அடிப்படையிலேயே தற்போது உள்நாட்டுக் கடன் மறுசீரமைக்கப்படுகின்றது.

கடனின் ஒரு பகுதியினை தள்ளுபடி செய்தல், கடனுக்கான வட்டி விகிதங்களைக் குறைத்தல், கடனை மீள் செலுத்துவதற்கான கால அவகாசத்தை நீடித்தல் என்ற ஏதாவது ஒரு முறையிலோ அல்லது கலவையாகவோ கடன் மறுசீரமைப்பினை செய்துகொள்ளமுடியும். இதற்கு கடன் வழங்குநர்கள் பிரதானமாக ஒப்புதலை தெரிவிக்கவேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்கள் தமது கடன் சுமையில் ஒரு பகுதியினை ஏற்க முற்படுகின்றபொழுது, இயல்பாகவே உள்நாட்டுகடன் வழங்குநர்களும் கடன் சுமையை ஏற்கவேண்டும். அப்பொழுதுதான் வெளிநாட்டுகடன் வழங்குநர்கள் கடன் மறுசீரமைப்புக்கு உடன்படுவார்கள்.

இதனால்தான் இலங்கை உள்நாட்டு கடன்மறுசீரமைப்பைச் செய்து முடிக்க வேண்டிய நிலையில் உள்ளது. உள்நாட்டுக் கடன்சீரமைப்பால் பொதுமக்கள் பெரும்பாலும் பாதிக்கப்படுவார்கள் என்று அரசியல்வாதிகளும், பொருளியலாளர்களும், பொருளியல் வல்லுநர்களும் எச்சரிக்கின்றார்கள். ஏனென்றால் அரசு இலங்கையில் உள்ள வங்கிகளிடமிருந்தும் தொழிலாளர் நம்பிக்கை நிதியத்தில் இருந்தும் தொழிலாளர் சேமலாப நிதியத்தில் இருந்தும் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள், தனிநபர்கள் ஊடாகவும் உள்நாட்டிலே கடனைப் பெற்றுள்ளது.

தற்பொழுது இருக்கக்கூடிய அச்சம் என்னவென்றால், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் வங்கிகளிடமிருந்து பெற்ற கடனை மறுசீரமைப்பு செய்ய அரசு முன்வருமானால் முழுமையாக மக்களினுடைய சேமிப்புக்கள் குறிப்பாக நிலையான வைப்புகள் மற்றும் தொழிலாளர்களுக்கு கிடைக்கக்கூடிய ஊழியர் சேமலாப நிதியத்தில், நம்பிக்கை நிதியத்தில் பாதிப்புகள் ஏற்படும். ஏனென்றால் வங்கிகள் பொதுமக்களினுடைய பணத்தினையே அரசுக்கு கடனாக வழங்கியுள்ளன. இந்த நிலையிலே குறிப்பிட்ட ஒரு தொகையை வங்கிகள் விட்டுக்கொடுக்க வேண்டும் என்றோ அல்லது வட்டி வீதங்களில் குறைவை ஏற்படுத்தவேண்டும் என்றோ அரசு கேட்டுக் கொண்டால் அதற்கு வங்கிகள் சம்மதித்தால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். ஆனால், கடன் மீளளிப்புக் காலத்தை வங்கிகள் நீடிக்கும்படி அரசு கேட்டுக்கொண்டால் (கடன் தவணை நீடிப்பு) இதற்கு வங்கிகள் சம்மதம் தெரிவித்தால் அது பெரிதளவில் பாதிப்பினை ஏற்படுத்தாது.

எவ்வாறாக இருந்தாலும் வங்கிகளின் உறுதிப்பாடு என்பது மிகவும் அத்தியாவசியமானது. வங்கிகளின் உறுதிப்பாடு பேணப்படும் என மத்திய வங்கியினுடைய ஆளுநரும் ஜனாதிபதியும் கூறியிருக்கின்றார்கள். எனவே இந்த வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியத்திடமிருந்து பெறப்பட்ட கடன்களில் அரசு தள்ளுபடிகளைச் செய்யாது என அறிவித்திருக்கின்றது. இந்த உத்தரவாதம் பேணப்படுமாக இருந்தால் அது பெரிதான பாதிப்புக்களை ஏற்படுத்தாது. ஆனால், எதிர்வு கூறல்களை குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. எதிர்வரும் திங்கட்கிழமை அல்லது வார இறுதி நாள்களான சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இது தொடர்பான முழுமையான விவரங்களைப் பெறக்கூடியதாக இருக்கும் - என்றார். (அ-ம-125)

### ஆசிகுளத்தில்...

நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது வவுனியா சிதம்பரபுரம் பிரதான வீதியும் மக்களால் முடக்கப்பட்டது.

அரசாங்கத்தின் நலன்புரித் திட்டத்துக்கான கொடுப்பனவுகள் தொடர்பான பட்டியல் தற்போது வெளியாகி வருகின்றது. இதில் தமது பெயர்கள் உள்ளடக்கப்படவில்லை என்றும் பதிலாக வெளிநாடுகளில் வசிப்போரின் உறவினர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் நலன்புரிக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்றும் பலரும் பரவலாகக் குற்றஞ்சாட்டுகின்றனர். இதனால், அரசாங்கத்தின் நலன்புரிக் கொடுப்பனவுத் தெரிவுப்பட்டியலுக்கு எதிராக நாளுக்குநாள் தீவிரமான போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் வவுனியா ஆசிகுளம் பகுதியில் நேற்று பெருமெடுப்பில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின்போது வருகைதந்த ஆசிகுளம் கிராம அலுவலர், வெளியாகியிருக்கும் பெயர்ப்பட்டியல் இறுதியானது அல்ல என்றும், எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடு செய்யும் பட்சத்தில் மேன்முறையீடு செய்பவர் நலன்புரித் திட்டத்துக்கு உள்வாங்கப்படுவதற்குத் தகுதி உடையவராயின் அவரது பெயர் திட்டத்தில் உள்வாங்கப்படும் என்றும் தெரிவித்ததை அடுத்து போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. மேன்முறையீடு செய்யும் வழிமுறைகள் தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு கிராம அலுவலராலும், சமுர்த்தி அலுவலர்களாலும் தெளிவூட்டலும் வழங்கப்பட்டது.

அரசாங்கத்தின் நலன்புரிக் கொடுப்பனவுத் தெரிவுப்பட்டியலுக்கு எதிராக வவுனியாவில் நேற்றுமுன்தினம் மூன்று இடங்களில் போராட்டம் நடத்தப்பட்டதுடன், ஏ-9 உள்ளிட்ட பிரதான வீதிகள் முடக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-18)

### ஐஸ் போதையை...

வந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மேற்படி இளைஞனுக்கு இரவு 9.30 மணியளவில் நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவரை சங்கானை மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோது அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DHL துரித பொதிகள் சேவை



▲ சகல நாடுகளுக்கும் கடிதங்கள், பொதிகள் அனுப்பிட முடியும்.
▲ மருந்து பொருட்கள், பழ வகைகள், எண்ணெய் வகைகள் மற்றும் இதர பொருட்கள் எம் ஊடாக அனுப்பிட முடியும்.
▲ 11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்

**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S. வீதி,
(முட்டாஸ் கடைச் சந்தி), யாழ்ப்பாணம். **T.P: 0777 55 45 28**

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியான வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.



- **வெல்டர் (Welder)**
- **சுத்திகரிப்பாளர் (Cleaner)**



மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதி யானவர்கள் எதிர்வரும் (30/06/2023) வெள்ளி, (01.07.2023) சனிக்கிழமைகளில், மு.ப. 9.00 - 2.00 மணி வரை நேரில் சமுகம் தரவும். முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

**உதயன்**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

**புதிய பிரிவு - A / L 2025**

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, விவசாயம், புவியியல், கணிதம், சித்திரம்

திகதி : 01.07.2023 சனிக்கிழமை
ஆரம்பநேரம் : 8.30 a.m
தொடர்புகளுக்கு : **077 017 5346** (CR.40231) (N-1)

## காணி விற்பனைக்கு

புத்தூர் மீசாலை வீதியில் வேம்பிராய் சந்தியி லிருந்து 100m தூரத்தில் 19 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் இல்லை. (cs 50974) (n.1)

Phone No. **077 924 0502**
Email - gunavathanyk@gmail.com

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பான்சி Bag கடைக்கு வேலையாள் தேவை.
(ஆண். பெண் இருபாலாரும்)
**077 1324 319**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி. புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
* ஒரு பரப்பின் விலை 200,000/= (இரண்டு லட்சம்) மட்டும்.

தொடர்பு: **076 733 6047, 076 7558 606, 076 9119 371**

## சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனை பொருட்கள், விளையாட்டு பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடல் பட்டின்கள், குடைகள், அழகுசாதன பொருட்கள், மாஸ்க் வகைகள், கவரிங் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்று கொள்ளலாம்.

**உரிமையாளர்:**
தே. கலைத்தாசன் (கரன்)
**021 3155 900**

**26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி)யாழ்ப்பாணம்.**

## குருதிக்கொடை முகாம் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 28

என்.டி.பி. வங்கியின் மறைந்த முன்னாள் ஊழியர் எஸ்.சத்யனின் நினைவாக குருதிக் கொடை முகாம் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் என்.டி.பி. வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் நடைபெறவுள்ளது. ஆர்வலர்கள் இதில் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கமுடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ச)

## வடமாகாண மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்......




**Pearl Island Inn**
**06 மாத பூர்த்தியை முன்னிட்டு**
**யூலை 01 ஆம், 2 ஆம் திகதிகளில்**
**Food Fiesta**
**(உணவுக்கொண்டாட்டம்)**







**Fiesta**
3 Heineken 630 ml,Chicken Devil, Onion Pakoda
**Rs.2200/=**

**Pearl Speacial Bite**
Mutton, Chicken, Prawns, Cuttlefish, Fish & Veg of the day
**Rs.3000/=**

மேலும் யூலை 01 ஆம் திகதி - 10 ஆம் திகதிவரை அறைகளுக்கான கொடுப்பனவில் 15 % கழிவு வழங்கப்படுகின்றது

| | | |
|---|---|---|
| Single Room | - 6000 - 15 % | |
| Double Room | - 7000 - 15 % | |
| Family Room | - 8000 - 15 % | |



**Hotline**
**077 002 2088**

**Kottu Fiesta**
Buy any kind of 3 Kottu & get a
**Mega Coke Free**

**Pearl Island Inn**
**Tourist Hotel & Restaurants**
**603, Hospital Road, Jaffna**
**(Near to Vembady Junction)**

உங்களை அன்புடன் அழைப்பது
உரிமையாளர்
**(சுவிஸ் சிகரம் - சேகர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.